25வது வெற்றிகரமான ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்™
VLAMBARAM™
Tel:(416) 282-8059 Fax:(416) 282-4978
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com / www.tamilvanakkam.com

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

கனேடிய
இலங்கை
இந்திய
சர்வதேச
விளையாட்டு
செய்திகள்
உடனுக்குடன் செய்திகளை பார்வையிட
தமிழ்வணக்கம்.கொம்
24/7 NEWS
www.tamilvanakkam.com

நதி 25 பாலம் 05 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MARCH 01, 2015

# இந்திய பிரதமரின் இலங்கைப்பயணம்

இந்திய பிரதமர் நரேந்திரமோடி மார்ச் 13, 2015 இல் மூன்று நாள் பிரயாணமாக இலங்கைக்கு வரவுள்ளாரென இலங்கை அரசாங்கப் பேச்சாளரும் சுகாதாரத்துறை அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.



இருபத்தி ஏழு வருடங்களுக்கு பின்னர் இந்திய பிரதமர் ஒருவர் இலங்கைக்கு அரசுப்பயணமாக வரவிருக்கிறார். 1987 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைக்கு அரசுப்பயணம் மேற்கொண்டு அப்போதைய இலங்கை அதிபர் ஜே.ஆர் ஜெயவர்த்தனேயுடன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அதன்பிறகு, இந்திய பிரதமர் ஒருவர் இலங்கைக்கான அரசுப் பயணம் ஒன்றை மேற்கொள்வது இதுவே யாகும். இடைக்காலத்தில் இந்திய பிரதமர் சிலர் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச மாநாடுகளில் மட்டும் கலந்து கொள்ள வந்துள்ளார்கள். உதாரணமாக 2008 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்து கொண்டார்.

பெப்ரவரி 15, 2015 இல் மூன்று நாள் அரசுப் பயணமாக இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன இந்தியா சென்றிருந்தார். இலங்கை அதிபராக பொறுப்பேற்ற பின்னர் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப்பயணம் இதுவாகும்.

இப்பயணத்தின் போது இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையேயான அணு ஒப்பந்தங்கள் உள்ளிட பல முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இதன் பின்னர் இந்திய பிரதமர் மோடியும் இலங்கை அதிபர் சிறிசேனவும் ஊடகவியலாளர்களை கூட்டாக சந்தித்தனர். அப்போது கருத்து தெரிவித்த இலங்கை அதிபர், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே வலுவான உறவு இருக்கிறது. அதனாலேயே தான் அதிபராக பதவியேற்றதும் முதல் வெளிநாட்டுப்பயணமாக இந்தியா வந்ததாகவும் இந்தப் பயணத்தின் மூலம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான உறவு மேலும் வலுப்பெறும், பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்தியப்பயணம் தனக்கு திருப்திகரமாக அமைந்தது என்று கூறினார். அத்துடன் அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை அதிபர் சிறிசேன இந்திய பிரதமர் மோடி இலங்கைக்கு வரவேண்டும் என அழைப்பு விடுத்திருந்தார்.

அங்கு பேசிய இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்திய இலங்கைக்கான நட்புறவு புதிய பரிமாணங்களை எட்டும் தருணம் வந்துவிட்டது. இலங்கை அதிபர் சிறிசேன வின் அழைப்பை ஏற்று மார்ச் மாதம் அவர்கள் நாட்டுக்கு செல்வேன் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தானும் சிறிசேனவும் முனைப்புடன் இருப்பதாகவும், இப்போது கையெழுத்தாகியுள்ள அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் இந்தியா இலங்கைக்கிடையேயான நம்பிக்கைக்கு ஒரு சான்று என்றார். விரைவில் இந்திய இலங்கை வர்த்தக செயலாளர்களுக்கு இடையேயான சந்திப்பு நடைபெறும். அதில் மரபுசாரா எரிசக்தி துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ச்சி 06ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

MORTGAGE ALLIANCE
The Guardian
SAVE YOUR MONEY
SAVE YOUR HOME
- 2nd Mortgage - Purchase & Refinance
- Renewal & Switch - Home Equity Loan
- Residential & Commercial Mortgage
We're Hiring Experienced & New Agents
Gini Annarasa
Cell: 416.830.3241
*Independently Owned & Operated

VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

கனேடிய
இலங்கை
இந்திய
சர்வதேச
விளையாட்டு
செய்திகள்

உடனுக்குடன் செய்திகளை
பார்வையிட
தமிழ்வணக்கம்.கொம்

24/7 NEWS

www.tamilvanakkam.com

Allstate Insurance Company Of Canada
Allstate. You're in good hands.

Home & Auto Insurance

வீடு, வாகன காப்புறுதி





Suren Navaratnarajah
(Agent)

Cell: 416.520.6916

E-mail: snavaratnarajah@allstate.ca


## விளம்பரம் பத்திரிகையின் 25ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகளுக்கு பரிசில்கள் வழங்குபவர்கள்

| குறுநாவல் போட்டி | கவிதைப் போட்டி | கட்டுரைப் போட்டி | திரைக்கதைப் போட்டி |
|---|---|---|---|
| Niru நிரு 416.750.1976 1ஆம் பரிசு வழங்குபவர் $1000 | Thavam yogas Super Market 416.267.0408 1ஆம் பரிசு வழங்குபவர் $500 | Das Murugadas (Mortgage Broker) 416.543.6614 1ஆம் பரிசு வழங்குபவர் $500 | Raj Rasaratnam (Realtor) 416.726.8055 1ஆம் பரிசு வழங்குபவர் $500 HomeLife / GTA Realty Inc. Brokerage |
| HomeLife / GTA Realty Inc. Brokerage 416.321.6969 2ஆம் பரிசு வழங்குபவர் $500 5215 Finch Ave, E, #203, Toronto,ON *Independently Owned & Operated | Seelan Aiyadurai (Real Estate Agent) 416.451.0271 2ஆம் பரிசு வழங்குபவர் $300 HomeLife / GTA Realty Inc. Brokerage | Ramanan.S (Realtor) 416.290.6000 3ஆம் பரிசு வழங்குபவர் $300 HomeLife / GTA Realty Inc. Brokerage | 416.399.6640 MS7 QUALITY PRE-OWNED AUTO SALES 3ஆம் பரிசு வழங்குபவர் $300 |
| Siva Panchalingam (Insurance Broker) 416.990.4908 3ஆம் பரிசு வழங்குபவர் $300 | Vijay Balan.s A1 Ink Rainbow Inc 416.286.0333 3ஆம் பரிசு வழங்குபவர் $200 | Kathir Subramaniyam Gnams Studio 416.750.8118 3ஆம் பரிசு வழங்குபவர் $200 | N. Thayabharan 416.332.1743 3ஆம் பரிசு வழங்குபவர் $200 |

# பிரதமர் வேட்பாளராக களமிறங்குவாரா மகிந்த ராஜபக்ஸ?

இன்னும் இரண்டு மாதங்களில நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறலாம் என்று அரசாங்கம் தெரிவித்து வருகின்ற நிலையில், இத்தேர்தல் பிற்போடப்படலாம் என்கிற செய்திகளும் வந்த வண்ணமுள்ளன. ஆனாலும், எப்போது பொதுத் தேர்தல் நடைபெறும் என்கிற கேள்வியை விட நடை-பெறப்போகும் அந்த தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ களமிறங்கு வாரா? என்கிற கேள்வியே முக்கிய ஒன்றாக எழுந்துள்ளது. ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்திய மக்களுக்கு மட்டுமன்றி தற்போதைய மைத்திரி அரசாங்கத்திற்கும் உள்ள சிக்கலான - தலைவலியை ஏற்படுத்தும் கேள்வியாகவே இது அமைந்துள்ளது.

ஊழல் மோசடிகளற்ற, அடாவடித்தனங்கள் அற்ற, ஒரு ஜனநாயக சூழல் நாட்டில் ஏற்பட வேண்டும் என்கிற காரணத்தினாலேயே மக்கள் ஆட்சிமாற்றத்திற்கு வாக்களித்தனர். தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் கூட, இவையே முதல் எதிர்பார்ப்பாக அமைந்தது. தமிழ் மக்களின் உடனடியான - அவசரமான பிரச்சினைகளுக்கு முதலில் ஒரு தீர்வு வேண்டும் என்பதும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு என்று வரும்போது சிக்கல்கள் ஏற்படும் என்பதும் தமிழ் மக்களுக்கு தெரியாததல்ல. ஆனால், ஒரு இறுக்கத்திற்குள்ளிருந்து முதலில் விடுபட வேண்டும் என்பதும் தமிழ்

**- விகிர்தன் -**

மக்களுக்குள்ள உடனடித் தேவையாக இருந்தது. இதனாலேயே தமிழ் மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பினர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ நடைபெற வுள்ள தேர்தலில் போட்டியிட்டு பிரதமராக வருவாரானால் என்ன நடக்கும் என்பதை இந்த மக்கள் இப்போது எண்ணிப் பார்க்கின்றனர்.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறை வேற்று அதிகாரங்கள் நாடா மன்றத்திற்கு வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவுள்ளதாகவும், ஜனாதிபதிக் குள்ள அதிகாரங்கள் பிரதமருக்கு வழங்கப்படும் எனவும் மைத்திரிபால சிறிசேன தேர்தலுக்கு முன்னரே மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார். தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளும், இந்த அரசிற்கு வெளியிலிருந்து ஆதரவளிக்கும் ஜே.வி.பி போன்ற கட்சிகளும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை மாற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவே உள்ளன. மஹிந்த ராஜபக்ஸ பிரதமராக வெற்றிபெற்று, அவ்வாறு அதிகாரங்கள் பிரதமருக்கு செல்லுமானால் என்ன நடக்கும்?

தற்போது, சிறிங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு பிரிவினரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளும் இணைந்து மீண்டும் மஹிந்த ராஜபக்சவை களமிற்குவதற்கு பகீரத முயற்சிகளில் இறங்கியுள்ளன. நுகேகொட யில் கடந்த 18 - 02 -2015 அன்று இடம்பெற்ற கூட்டம் மிக முக்கியமானது.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை பிரதமராக்க ஆதரவு தெரிவிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிபி. ரத்நாயக்க, ஐயந்த கொட்டகொட, கீதாஞ்சன குணவர்த்தன, சாலிந்த திஸாநாயக்க மற்றும் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, தினேஸ் குணவர்த்தன, உதய கம்மன்பில, டிவி.உபுல், நிமல் லன்சா, தயான் ஜயதிலக உள்ளிட்ட பலர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மஹிந்த ராஜபக்ஸவை சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அறிவிக்க வேண்டும் என்று அக்கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டது. நாட்டில் பிரிவினைவாதம் மீண்டும் தலை தூக்கி உள்ளதாகவும் நாட்டை மீட்ட தலைவருக்கு மீண்டும் அழைப்பு விடுப்பதாக வும் இனவாத கருத்துக்கள் அக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன. இக்கூட்டத்தில் கணிசமாக மஹிந்த ஆதரவாளர்கள் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மஹிந்த ராஜபக்ஸவை இணங்க வைக்க அவரது சொந்த ஊரான மெதமுலனவிற்கு மக்களை அழைத்துக்கொண்டு செல்லவுள்ள தாகவும் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஸ தான் பிரதமர் வேட்பாளராக போட்டியிட விரும்பவதாக இன்னும் பகிரங்கமாக தெரிவிக்கவில்லை. அவர் மீது தற்போது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் காரணமாக அவர் சற்று மௌனமாக இருக்கலாம். ஆனால், நுகேகொட கூட்டம் அவரை மக்கள் நிர்ப்பந்திப்பதாக காட்டும் வகையில் நிகழ்த்தப்பட்டதாகவே கூறப்படுகின்றது.

நுகேகொட கூட்டத்தை தொடர்ந்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சில பங்காளிக் கட்சிகள், மஹிந்தவிற்கு ஆதரவாக தொடர் மக்கள் சந்திப்புகளை நடத்துவதற்கும் தீர்மானித்துள்ளன. எதிர் வரும் மாரச் 6 ஆம் திகதி கண்டியில் மாபெரும் கூட்டமொன்றை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான பொறுப்பு மேல்மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பிலவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் குருணாகலை, அநுராதபுரம், மாத்தளையிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேவின் கோட்டையான பொலனறுவையிலும், 'மஹிந்த வேண்டும்' என்ற தொனிப் பொருளில் கூட்டம் நடத்தப்படவுள்ளதாக மஹிந்த ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ 58 இலட்சம் வாக்குளைப் பெற்றதாகவும், சுமார் 4 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்திலேயே அவர் தோல்வி கண்டதாகவும் பிரதமர் வேட்பாளராக அவர் களமிறங்கினால் வெற்றியடைவது நிச்சயம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தற்போது மௌனம் காத்து வரும் மஹிந்த, எதிர்காலத்தில் இத்தகைய கூட்டங்களில் பங்கேற்பதற்கான சாத்தியம் உள்ளதாகவும் கூட தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், மஹிந்த ராஜபக்ஸ மீண்டும் தேர்தலில் போட்டியிட மாட்டார் எனவும், தான் அவரை நன்கு அறிந்து வைத்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறுகின்றார். இந்நிலையில், பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்பதில்லை என முதலில் தெரிவித்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசார நடவடிக்கைகளில் பிரதான பங்கை வகிக்கவுள்ளார் என தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையினை ஏற்று, அவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார். மஹிந்த தலைமையில் மூன்றாம் கூட்டணி-யொன்று உருவாக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதால், எதிர்கால அரசியல் நிலை-

தொடர்ச்சி 04ஆம் பக்கம்





APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# ஆரோக்கிய வாழ்விற்கு அன்றாடம் வேம்பு



உங்களுக்குத் தெரியுமா? நம் அனைவருக்குள்ளும் எப்போதும் கான்ஸர் செல்கள் இருக்கின்றன... ஆனால், குறைந்த அளவில். அது எப்போது ஒரு அளவு தாண்டிச் செல்கிறதோ, அப்போது நோயாக அறியப்படுகிறது. வேம்புக்கு கான்ஸர் செல்களையே அழிக்கும் சக்தி இருக்கிறது.

ஈஷா யோகா மையத்தில் தினமும் அதிகாலையில் ஒரு சிறிய கோலிக்குண்டு அளவு வேப்பிலையும் அதேஅளவு மஞ்சள் உருண்டையும் வெதுவெதுப்பான நீருடன் வெறும் வயிற்றில் யோகப் பயிற்சிக்கு முன் உட்கொள்ளப்படுகிறது.

இது நாள் முழுக்க அளவான உஷ்ணத்தையும் துடிப்பையும் உடலில் தக்கவைத்திருக்க உதவுகிறது. இது நம் உடலைச் சுத்தம் செய்கிறது. உணவுப் பாதை முழுக்க சிறிய அளவிலான தொற்று நீக்கியாகச் செயல்பட்டு சுத்தம் செய்கிறது.

பச்சை நிறத்தில் வாடாத நிலையில் உள்ள வேப்பிலை போதும். மையாக அரைத்து, மஞ்சள் பொடியும் நீரும் கலந்த உருண்டையுடன் விழுங்கி விட வேண்டியதுதான். கசப்பு விரும்பாதோர், அதன் மீது தேன் தடவி விழுங்கலாம். அடுத்த ஒரு மணி நேரத்திற்கு எந்த உணவும் உட்கொள்ளக் கூடாது. இதை யோகாசனப் பயிற்சிக்கு முன் எடுத்துக்கொள்வது சிறந்தது.

வேப்பிலைக் கொழுந்துதான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. கொழுந்தில் கசப்பு குறைவு என்பது தவிர வேறு எந்த சிறப்பம்சமும் அதில் இல்லை. வேம்பு அதிகமாக எடுத்துக்கொள்வதால் எந்தக் கெடுதலும் கிடையாது. தோல் நோய், சர்க்கரை நோய், ஆஸ்துமா உள்ளவர்கள் தினமும் இதனை அதிக அளவில் எடுத்துக்கொள்வது நல்ல பலனை அளிக்கும். ஆஸ்துமா உள்ளவர்களுக்கு அவர்களுக்குத் தேவையான உஷ்ணத்தையும் வேம்பு கொடுக்கிறது.

எந்த வகையான அலர்ஜி இருப்பவர்களுக்கும் இது அருமருந்து. பச்சை வேப்பிலைகளை மைய அரைத்து உடல் முழுக்க அப்பிக்கொண்டு ஒரு மணி நேரம் கழித்துக் குளிப்பதும் மிகுந்த பலனளிக்கும். தோல் அலர்ஜி மட்டுமல்லாமல், எல்லா வகையான அலர்ஜிக்கும் இது பயனளிக்கும்.

வேம்பின் கசப்புடன் ஒரு நாளைத் துவங்குவது வாழ்வு முழுக்க இனிமை நிரம்ப நல்ல வழி. வேம்பின் மீது இன்று ஏராளமான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு, வேம்பு ஒரு அதிசயமான மரம் என்றே சொல்லப்படுகிறது. வேறு எந்தத் தாவரத்துக்கும் நமக்குக் கொடுக்க இத்தனை நன்மை இல்லை.



**சத்குரு வாசுதேவ்**

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

நம் முன்னோர்கள் வேப்பிலையையும் மஞ்சளையும் தெய்வீகமாகக் கருதியதற்கும் அம்மனின் வெளிப்பாடாக இதைப் போற்றியதற்கும் ஆங்காங்கே வேப்ப மரத்தைக் கோயிலாகக் கும்பிட்டதற்கும் காரணம் – இதன் அற்புதமான மருத்துவக் காரணங்களினால்தான்!







# பிரதமர்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

வரங்களைக் கருத்தில் கொண்டு அவர் இவ்வாறானதொரு முடிவுக்கு வந்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.



பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சுதந்திரக்கட்சிக்கு தலைமைத்துவத்தை வழங்காவிட்டால், அக்கட்சியில் உள்ள பலர் மஹிந்தவின் பக்கம் செல்லக்கூடும். அத்துடன், சுதந்திரக் கட்சியும் இரண்டாக உடையும் நிலை ஏற்படும் என கொழும்பில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, கட்சியின் நலன் கருதியும், மஹிந்த கூட்டணியை எதிர்கொள்ளும் நோக்கிலுமே அவர் பொதுத் தேர்தலில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் கலந்துகொள்ள உள்ளார். இவை எல்லாமே மஹிந்த களமிறங்கக்கூடும் என்கின்ற அச்சம் தற்போது மைத்திரி அரசிற்கு ஏற்பட்டுள்ளது என்பதையே வெளிப்படுத்துகின்றது. அண்மையில் குடும்பத்தினருடன் கதிர்காமத்திற்கு சென்ற மஹிந்த ராஜபக்ஸ, தங்கத்தினால் செய்யப்பட்ட ஆறு அங்குலம் உயரமான திரிசூலம் ஒன்றில் வெள்ளி காசு ஒன்றை கட்டி காணிக்கையாக செலுத்தியுள்ளார். 84 ஆயிரம் விளக்குகளை ஏற்றி வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார்.

துட்டகைமுனு மன்னன் போருக்கு செல்லும் முன்னர் இப்படியான வேண்டுதல் ஒன்றை நிறைவேற்றியதாக சொல்லப்படுகின்றது. போர் வெற்றிக்குப் பின்னர் தன்னை நவீன துட்ட கைமுனுவாக உருவகித்துக் கொண்டுள்ள மஹிந்த, அடுத்து நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் களமிறங்கப் போகின்றாரா என்றெல்லாம் மக்கள் மத்தியில் கேள்விகள் எழத் தொடங்கியுள்ளன.

இதேவேளை, குற்றச்செயல்களில் தொடர்புபட்டவர்கள் தேர்தலில் வேட்பாளராக முடியாது என்ற விதத்தில் சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது மஹிந்த ராஜபக்ஸ உள்ளிட்ட அவரது குடும்ப உறுப்பினர்கள் மீது ஊழல் மோசடி தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேர்தலுக்கு முன்னர் இந்த முறைப்பாடுகளுக்கான தீர்ப்பு வந்தால் - அதனூடாக அவர் குற்றவாளியாக காணப்பட்டால், சட்டப்படி அவர் தேர்தலில் போட்டியிட முடியாமல் போகலாம். அது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மைத்திரி அரசாங்கம் முயல்வதாகத் தெரிகின்றது.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate Office : 2006 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME

#1 Brokerage in Toronto*

Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?

- நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?
- ரீபைனான்ஸ் செய்ய வேணும்?
- 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க வேணும்?



- பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?
- வீடு வாடகைக்கு விட அல்லது எடுக்க வேணும்?
- எல்லா வகையான ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும் ??

## மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,



## "மோட்கேஜ் கிளினிக்" ✓

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION



எமது முகவரி

**1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9**

(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

And,,

**For All Your Real Estate Services**

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

# இரகசிய முகாம்கள் கண்டறியப்படுமா? காணாமல் போனவர்கள் வெளிவருவார்களா?

## தாயகமடல்

இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் பிரதானமாக இரண்டு விடயங்களுக்கு முன்னுரிமை அளித்திருக்க வேண்டும் என தமிழ் மக்கள் கருதுகின்றனர். ஒன்று தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பானது. இரண்டாவது காணாமல் போனவர்கள் தொடர்பிலானது. இந்த இரு விடயங்களும் இன்று தமிழ் மக்களால் முக்கியமானதாக புதிய அரசிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இவையிரண்டும் தவிர்க்கவியலாத மனிதாபிமான பிரச்சினைகள் என்பதும் குறிப்பிடத் தக்கது. முன்னாள் அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள், மறைத்து வைக்கப்பட்ட சொத்துக்கள் என பல விடயங்களை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் புதிய அரசாங்கம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் இந்த மனிதாபிமான விடயங்களுக்கு ஏன் முன்னுரிமை வழங்கவில்லை, நடவடிக்கையில் இறங்கவில்லை என்கிற கேள்விகள் தமிழ் மக்களிடம் எழுகின்றன.

காணாமல் போனவர்கள் தொடர்பில் முன்னைய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு காலத்தை இழுத்தடிக்கும் குழுவாகவே இயங்கி வருகின்றது. அது தொடங்கப்பட்ட போது அதற்கு ஒரு கால நிர்ணயம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அது வீணே காலத்தை விழுங்கி, பிரச்சினையை மழுங்கடிக்கும் விதமாகவே அமைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால விசாரணை அறிக்கை ஒன்று வெளியிடப்படவுள்ளதாக தற்போது தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த இடைக்கால அறிக்கைக்கான தயாரிப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும், மார்ச் மாதம் முற்பகுதியில் ஜனாதிபதியிடம் அறிக்கை கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது காத்திரமான ஒரு அறிக்கையாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. எனவே, முன்னைய அரசின் நடைமுறைகளை தவிர்த்து, புதிய அரசாங்கம் இதற்கு புதிய பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். ஆனால் அதற்கான முனைப்புகள் உள்ளதாகத் தெரியவில்லை.



காணாமல் போனவர்கள் பலர் இன்னமும் உயிரோடு இருக்கலாம். அவர்கள் இரகசிய மறைவிடங்களில் வைக்கப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேகம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் உள்ளது. இந்த நிலையில்தான், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் திருகோணமலையிலுள்ளதாக கூறப்படும் 'கோட்டா' முகாம் குறித்து நாடாளுமன்றத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி குறிப்பிட்டிருந்தார். திருகோணமலையிலுள்ள கோட்டா முகாமில் வெளியுலகத் தொடர்புகள் அற்ற நிலையில் 700 இற்கும் மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் 'கோட்டா' முகாம் தொடர்பில் உடனடி விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரியிருந்தார்.

கடந்த காலத்தில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமல் போயுள்ள நிலையில் அவர்களில் பலர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் திருகோணமலையிலுள்ள கடற்படைத்தளத்தில் வெளியுலகத் தொடர்புகள் இல்லாத வகையில் 35 குடும்பங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன எனவும், இவற்றில் ஒருசில குடும்பங்கள் மட்டும் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தப் புதிய அரசு உருவாக தமிழ் மக்களும் பாரிய பங்களிப்பு செய்துள்ள நிலையில் இவ்விடயங்கள் குறித்து புதிய அரசாங்கம் ஆராய்ந்து உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் நாடாளுமன்றில் கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில், திருகோணமலை 'கோட்டா' தடுப்பு முகாம் பற்றிய தகவல் உட்பட வடக்கு, கிழக்கில் காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டிய விடயங்களை தான் ஜனாதிபதியின் கவனத்துக்கு உடன் கொண்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவம் மற்றும், கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். ஆனால் இது குறித்து ஜனாதிபதியின் பதில் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. ஆனால் இந்த விடயங்களை கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய மறுத்துள்ளார். திருகோணமலையில் 'கோட்டா' முகாம் என்று எதுவும் இல்லை எனவும், கடற்படையின் கட்டுப்பாட்டில் எவரும் தடுத்து வைக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார். 'கோட்டாபய' என்ற பெயரில் கடற்படை முகாம் ஒன்று முல்லைத்தீவில் மட்டுமே உள்ளது எனவும், அங்கு யாரையும் கடற்படையினர் தடுப்பில் வைத்திருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இதுவே அரசாங்கத்தின் பதிலாகவும் அமைகிறதா என தமிழ் மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை, அண்மையில் 'நியூயோர்க் டைம்ஸ்' சஞ்சிகைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளித்துள்ள பேட்டியில், நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், கைதிகளின் விபரம் திரட்டப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். இரகசிய முகாம்கள் இருப்பின் அதில் உள்ளவர்களை வெளியில் விடுவித்து முகாமை மூடிவிட முடியும் எனத் தெரிவித்துள்ள அவர், காணாமல் போனவர்கள் குறித்து கருத்து வெளியிடுகையில், 'காணாமல் போனவர்கள் ஆயிரக்கணக்கில் இல்லை. நான் நினைக்கிறேன். நூற்றுக் கணக்கில் இருக்கலாம். காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டு பெயர் கண்டுபிடிக்க முடியாதவர்கள் இறந்திருக்கக் கூடும் அல்லது வெளிநாடு சென்றிருக்கக் கூடும்' எனவும் குறிப்பிட்டுள்ளார். எனினும், இந்த விபரங்களை மார்ச் மாத இறுதிக்குள் வெளியிட முயல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்களை திரட்டுவது என்பது சிக்கலான விடயமல்ல. அதனை உடனடியாக மேற்கொண்டு விபரங்களை வெளியிட முடியும். அதேபோன்று நாட்டில் இரகசிய முகாம்கள் உள்ளனவா, அவற்றில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் யார் என்ற விபரத்தையும் கண்டறிவது இயலாத ஒன்றல்ல.

**- ஆதித்தன் -**

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்றதும், பாதுகாப்பு கட்டமைப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. படைத் தளபதிகள் உட்பட, புலனாய்விற்கு பொறுப்பாக இருந்தவர்கள் கூட மாற்றப்பட்டு புதிய அரசிற்கு நம்பிக்கையானவர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இதனடிப்படையில், முன்னையை அரசின் பாதுகாப்பு கட்டமைப்பிலிருந்த இரகசிய நடவடிக்கைகள் கண்டறியப்பட்டு உண்மைகளை வெளிக் கொண்டு வருவதில் புதிய அரசாங்கம் இனியும் காலத்தை நீடிக்கக் கூடாது.

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: *Canyon Press Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## இந்திய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒத்துழைப்பு அதிகரிப்பு குறித்து விரிவாக ஆலோசிக்கப்படும் என்றார்.

இலங்கை அதிபர் தனது இந்தியப் பயணத்தின் போது டெல்லியில் உள்ள காந்தி காந்தி சமாதி, பீஹாரில் உள்ள புத்தகாயா மற்றும் திருப்பதி வெங்கடாசலபதி கோயில் போன்றவற்றிற்கும் சென்றிருந்தார். இலங்கை அதிபர் தனது இந்தியப்பயணத்தின் போது புதுடெல்லியில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி உட்பட இந்திய குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி மற்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜையும் சந்தித்தார்.

இலங்கை அதிபரின் அழைப்பை ஏற்று மார்ச் 13, 2015 இல் இலங்கை வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்திற்கும் பயணம் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு இந்திய பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்டால் அதுவே இந்திய பிரதமர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட முதலாவது பயணமாக இருக்கும்.

# அடமானக்கடன் வழங்குபவர்களின் வியாபார போராட்டம்

ஜனவரியில் மத்திய வங்கியின் எதிர்பாராத வட்டி வீத குறைப்பு நிதி நிறுவனங்களின் அடமானக்கடன் வழங்குவதில் போட்டா போட்டி ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. நிதி நிறுவனங்களிற்கிடையேயான அடமானக்கடன் வழங்கும் போராட்டத்தில் நலன் பெறுபவர்கள் வாடிக்கையாளர்களே. சிறிய நிதி நிறுவனங்கள் மற்றும் கிறடிட் யூனியன் (Credit Union) போன்றவை இப்பொழுது பெரிய நிதி நிறுவனங்களை விட சிறந்த வட்டி வீதத்தில் அடமானக் கடனைக் கொடுப்பதை அனுபவத்தில் காணக்கூடியதாக உள்ளது. கனடாவின் பெரிய நிதி நிறுவனங்கள் தமது 5 வருடத்திற்குரிய மாறாத, நிலையான (Closed Mortgage) அடமானக் கடன் வட்டி வீதத்தை 2.79% வழங்கும் இச்சந்தர்ப்பத்தில், சிறிய நிதி நிறுவனங்கள் 2.39%ஐ வழங்குவதனைக் காணலாம்.

அத்துடன் 7 வருடத்திற்குரிய வட்டி வீதத்தை 2.99% இற்கு North Eastern (BC) வழங்குவதாக விளம்பரப்படுத்துகின்றது. முக்கியமாக கிறடிட் யூனியன் குறைந்த வட்டி வீதத்தை வழங்குகின்றது. அதே நேரத்தில் மாறுகின்ற அடமானக்கடனை (Variable Mortgage) 2.00% (Prime Rate - 0.85) இல் பெறக்கூடியதாக உள்ளது.

இப்பொழுதுள்ள அடமானக்கடன் வட்டி வீதம் 2012 இலிருந்து இதுவரையில் மிகக் குறைவாக உள்ளது. எதிர்காலத்தில் மற்றுமொரு வட்டிவீத இறக்கத்தை நிதி நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. இவ்வாறான வட்டிவீத இறக்கம், ஏற்கனவே ரொறொன்ரோ போன்ற நகரில் அதனை வியாபாரத்தின் நிலைப்பாட்டை மேலும் வீரியம் அடையச் செய்யும் என எதிர்பார்க்கலாம்.

உலகின் Super Rich (பொதுவாக Super Rich எனக் கருதுபவர்களின் பெறுமதி US$30 மில்லியன் பெறுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்) என அழைக்கும் மிகப்பெரிய பணக்காரர்கள் தமது ஆதனத்திற்குரிய முதலீடு செய்யும் இடமாக ரொறொன்ரோ, வன்கூவரை தெரிவு செய்கின்றார்கள் என 'Realtors Knight Frank' என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.



**அதீத பணக்காரர்களின் முதலீடு செய்யும் நகரங்களில் ரொறொன்ரோ வும் உள்ளது.**

உலகின் முக்கிய 100 நகரங்கள் தெரிவு செய்யப்பட்டு இந்த அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது. ஜனவரி 2014 இலிருந்து டிசம்பர் 31, 2014 வரையான இந்த அறிக்கையில் நியூயோர்க், அஸ்பென் (Aspen)

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 434**

முதலிடத்திலும் ரொறொன்ரோ 30 ஆவது இடத்திலும் வன்கூவர் 25வது இடத்திலும் காணப்படுகின்றது.

இவர்களின் முதலீட்டால் கடந்த வருடத்தில் 'Luxury Homes' இன் விலை ரொறொன்ரோ வில் 7.1% இனால் அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்


# HomeLife/GTA Realty Inc.Brokerage*

*Independently Owned & Operated

**"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"**

***Raja Mahendran,*** P.Eng.
*Broker / Owner*



**5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969**

## HOTEL / GAS STATION FOR SALE

• Brand name hotels for sale in GTA & Ontario.
Great Opportunity to buy leading name. Hotel properties with a reasonable downpayment.

• Brand name gas stations.
New & operative around GTA area.
Minimum investment.
1 Million.

## BRAND NEW HOUSE FOR SALE



*Scarborough East. Double Garage. Double door. Finished basement with washroom, kitchen, Sep. entrance. Move in any time.*
*Asking Only $889,000*

## BUILDING FOR SALE

*42,000 sq.ft. industrial building for sale in Scarborough. Four loading locks, lots of parking, drive through door, Asking $3.4 Million*
*Lawrence & Meadowvale*

## DETACHED HOUSE FOR SALE

*Scarborough North*
*4 Level Back split. Finished basement. 2 Kitchen. Sep. entrance. Asking 599,000.*

* INDEPENDENTLY OWNED AND OPERATED

# போட்டியின் முடிவை மாற்றும் ஹஅம்பயர் CALL !

## விளையாட்டுத் தகவல்கள் 361

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் டிஆர்எஸ் நடைமுறையில் புதிய சர்ச்சை வெடித்துள்ளது. டிஆர்எஸ் என்பது நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் நடைமுறையாகும். அதாவது கிரிக்கெட் ஆட்டத்தில் களத்திலுள்ள இரு நடுவர்களுக்கும், விக்கெட் விவகாரத்தில் சந்தேகம் ஏற்பட்டால், மூன்றாவது நடுவரை தொடர்பு கொண்டு கேட்கலாம். இந்த விவகாரத்தை மூன்றாவது நடுவர் தொலைக்காட்சியில் மீண்டும் போட்டு பார்த்து முடிவை அறிவிப்பார். இந்த டிஆர்எஸ் என்னும் முறை சமீபகாலமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



நடுவருக்கு சந்தேகம் வந்தால் மூன்றாவது நடுவரை அணுகுவதை போல, வீரர்களுக்கு நடுவர் முடிவின் மீது சந்தேகம் இருந்தால் டிஆர்எஸ் கேட்கலாம். நடுவர் முடிவை மறுபரிசீலனை செய்ய கோரிக்கை விடுக்கும் அதிகாரம் அணியின் அணித்தலைவர்களுக்கு தரப்பட்டுள்ளது. ஆனால் அதற்கும் எண்ணிக்கை வரைமுறை கொடுக்கப் பட்டுள்ளது. தற்போது புதிய பிரச்சனை என்னவென்றால் 'ஹஅம்பயர் கோல்' என்ற புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, டிஆர்எஸ் முறையில் மூன்றாவது நடுவருக்கு கோரிக்கை செல்லும் போது அதனை மீண்டும் கள நடுவர்கள் மறுபரிசீலனை செய்ய முடியும். ஆனால் பெரும்பாலும் நடுவர்கள் தாங்கள் எடுத்த முடிவு சரிதான் என்று நடந்து கொள்கின்றனர். இதனால் தற்போது விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்த சர்ச்சை வெடிக்க அடுத்தடுத்த நாட்களில் நடந்த இரு தவறுகள் காரணமாக அமைந்து விட்டன. கடந்த போட்டியின் போது, கிறிஸ் கெயில் 215 ஓட்டங்களை குவித்து சாதனை படைத்தார். ஆனால் அந்த போட்டியில் அவர் முதல் பந்திலேயே டக்-அவுட் ஆக வேண்டியவர். இங்குதான் டிஆர்எஸ் தவறு இழைத்தது.

கிறிஸ் கெயில் சந்தித்த முதல் பந்தை ஜிம்பாப்வேயின் தினாஷே பன்யங்காரா வீசினார். அந்த பந்து கெயில் காலில் பட்டதால் எல்பிடபிள்யூ அப்பீல் செய்யப்பட்டது. கள நடுவர் ஸ்டீவ் டேவிஸ் அதை அவுட் இல்லை என்றார். எனவே ஜிம்பாப்வே அணி சார்பில் நடுவரின் முடிவை மறு பரிசீலனை செய்ய கோரப்பட்டது. ஆனால் மூன்றாவது நடுவர் ரன்மோரே மார்டினெஸ், இதை "அம்பயர் கோல்" முறையில் தீர்க்குமாறு கூறிவிட்டார். கள நடுவர் தனது முந்தைய முடிவு சரிதான் என்றார். ஆனால் டிவி ரிப்ளேயில், கிறிஸ்கெயில் எல்பிடபிள்யூ ஆனது அழகாக தெரிந்தது. அந்த ஒரு தப்பான முடிவு போட்டியின் முடிவை புரட்டி போட்டுவிட்டது. இதேபோல, அயர்லாந்து - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகளுக்கு நடுவே நடைபெற்ற போட்டியிலும் முக்கிய கட்டத்தில் தவறு இழைக்கப்பட்டது. எமிரேட்ஸ் அணிக்கு எதிரான இலக்கை விரட்டும் போது அரை சதம் கடந்து சிறப்பாக ஆடிவந்த அயர்லாந்தின் கேரி வில்சன் காலில் பந்து படவே, எல்பிடபிள்யூ அப்பீல் செய்யப்பட்டது. கள நடுவர் அவுட் தர மறுக்க, முடிவை மறுபரிசீலனை செய்ய கேட்டது, எமிரேட்ஸ் அணி. ஆனால் மூன்றாம் நடுவரோ, "அம்பயர் கோல்" முறையில் பரிசீலனை செய்ய கள நடுவரை கேட்டுக் கொண்டார். ஆனால் கள நடுவரோ தனது முடிவில் பிடிவாதமாக இருந்தார். கேரி வில்சன் எடுத்த 80 ஓட்டங்கள் அயர்லாந்து வெற்றிக்கு காரணமானது. டிவி ரிப்ளேயில், கேரி வில்சனின் பின்னங்காலில் பந்து பட்டு நடு ஸ்டம்பை பதம் பார்க்க வாய்ப்பு இருந்தது அழகாக தெரிந்தது. இதுபோன்ற பிரச்சனைகள் தொடர்ந்து எழுந்த வண்ணம் இருக்க அம்பயர் கோல் முறையை நீக்க வேண்டும் என்றும், தொழில்நுட்ப உதவியுடனேயே டிஆர்எஸ் நடைமுறை இருக்க வேண்டும் எனவும் முன்னணி வீரர்கள் குரல் கொடுக்க தொடங்கியுள்ளனர்.




### உலகக்கிண்ணத் தொடரில் ஆதிக்கம் செலுத்தும் ஜெயவர்த்தனே, சங்கக்காரா, டில்ஷான்

நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் விளையாடி வரும் வீரர்களில் இலங்கை வீரர்கள் தான் உலகக்கிண்ணப் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களாக இருக்கின்றனர். 11வது உலகக்கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் விளையாடி வரும் வீரர்களில் இலங்கை வீரர்கள் ஜெயவர்த்தனே (1075), சங்கக்காரா (1037) உலகக்கிண்ணத் தொடரில் ஆயிரம் ஓட்டங்களை குவித்து முதல் இரு இடங்களை பெற்றுள்ளனர். மற்றொரு இலங்கை வீரரான டில்ஷான் (741) 5வது இடத்தில் இருக்கிறார். கிறிஸ் கெயில் (859) 3வது இடத்திலும், டிவில்லியர்ஸ் (780) 4வது இடத்திலும் இருக்கின்றனர்.

### அதிரடி மன்னன் கிறிஸ் கெய்ல் உலக சாதனை

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான உலகக் கிண்ண லீக் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணியின் கிறிஸ் கெய்ல் இரட்டை சதம் விளாசி உலக சாதனை படைத்தார். அவுஸ்திரேலியாவின் கான்பெரா நகரில், நடக்கும் பி பிரிவு ஆட்டத்தில் ஜிம்பாப்வே - மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதுகின்றன. இப்போட்டியில் ஜிம்பாப்வே யின் பந்தை சிறந்த முறையில் எதிர்கொண்டு கிறிஸ் கெய்ல், இரட்டை சதம் அடித்தார், இதில் 10 பவுண்டரிகளும், 16 சிக்சர்களும் அடங்கும். இதன் மூலம் உலகக் கிண்ணப் போட்டியில் முதல் இரட்டை சதம் அடித்த வீரர் என்ற சாதனையை கெய்ல் எட்டினார். மேலும் வீரர் ஒருவர் எடுத்துள்ள அதிகபட்ச ஸ்கோர், அதிவேகமாக அடிக்கப்பட்ட முதல் இரட்டை சதம் என்ற சாதனைகளையும் கெய்ல் படைத்தார்.

கெய்ல், சாமுவேல்ஸ் இணைந்து பார்ட்னர்ஷிப்பில் குவித்த 372 ஓட்டங்கள், ஒருநாள் போட்டிகளில் அதிகபட்ச பார்ட்னர்ஷிப் ஆகும். ஒருநாள் போட்டிகளில் அதிகபட்ச சிக்ஸர்கள் (16 சிக்ஸர்கள்) என்ற ரோஹித் சர்மா மற்றும் ஏபி டிவில்லியர்ஸின் சாதனையை கெய்ல் சமன் செய்தார். இதற்குமுன் தென் ஆப்பிரிக்காவின் கிறிஸ்டன் (188 ஓட்டங்கள், எதிர்– யு.ஏ.இ, 1996), இந்தியாவின் கங்குலி (183, எதிர்– இலங்கை, 1999) அதிக ஓட்டங்களை பதிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.



**எஸ். கணேஷ்**




TUTORING

KEEN TUTORING CENTRE

By Qualified & Experienced Tutors

- CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- FUNCTIONS, ADV. FUNCTIONS
- CALCULUS & VECTORS, DATA MGT
- SCIENCE, MATH, ENGLISH

உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு

✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6

GR 9- 12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"

Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com


$379,000
2 Bedrooms, 1 W Room
Amazing Opportunity To Invest
$479,900
3 Bedrooms, 3 W Room
Stunning Home In Great Location.
$484,900
3 Bedrooms, 3 W Room
Concrete Stone Designer, Patio At The Backyard With Gazebo,
$499,900
3 Bedrooms, 3 W Room
Great Kitchen Layout Facing F/B For Great Home Entertainment
$535,000
4+1 Bedrooms, 3 W Room
Upgraded With Marble/ Granite Floors,
$549,000
4 Bedrooms, 3 W Room
Beautiful Property Shows Like A Model.Features
$549,900
3 Bedrooms, 3 W Room
Bright Beautiful Well Maintained Family Home In Markham
$559,900
4 Bedrooms, 3 W Room
Professionally Finished Basem't, 9' Ceilings,
$569,900
4 Bedrooms, 3 W Room
Finished Open Concept Basement With 3 Piece Washroom
$569,900
3 Bedrooms, 3 W Room
Wow-O-Wow. You Don't Want To Miss This One.
$589,900
4 Bedrooms, 4 W Room
Pot Lights, &10' Ceiling, Finished Open Concept Basement
$649,900
4 Bedrooms, 4 W Room
Maple Kitchen Cabinet With Large Island. 9Ft Ceiling On Main Flr.
$688,000
4+1 Bedrooms, 3 W Room
Finished Bsmt & Pot Lights. $$$upgraded! New Roof
$759,000
3+1 Bedrooms, 3 W Room
Open Concept. Convenient Indoor Access To Garage. &Nb
$2,189,900
4 Bedrooms, 3 W Room
Design Rich W/Upgrades. Marble & Hrdwd Flrs
KZG 647-200-5833
Sell your home faster and more money
ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com
Condo on Bloor (Yonge/Bloor)
VIP PRICING WITH DISCOUNTS
RE/MAX Platinum Club Award
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770
YOUR HOME SOLD IN 30 DAYS OR WE BUY IT
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# இலங்கை அகதிகள் பற்றிய பேச்சு இல்லை

மூன்று நாள் பயணமாக இந்தியா வந்த இலங்கை அதிபர் மைத்ரிபாலா சிறீசேனவுடன் இந்தியா பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. அணுசக்தியில் ஒத்துழைப்பு முதல் கால்நடைகளைத் தாக்கும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் இணைந்து செயல்படுவது வரை ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. ஆனால் இலங்கைத் தமிழர் பற்றியோ இலங்கை அகதிகள் பற்றியோ பேச்சே இல்லை.



மீனவர் பிரச்சினை பற்றி செய்தியாளர்களிடம் சிறீசேன கூறுகையில், ஆக்கப்பூர்வமாகவும் மனிதாபிமானத்துடனும் பிரச்னையை அணுகித் தீர்வுகாண ஒப்புக் கொண்டிருக்கிறோம் என்று மட்டுமே தெரிவித்தார். சிறீசேன இந்தியா வருவதற்கு முன்பாக 82 படகுகளை விடுவிக்க இலங்கை அரசு உத்தர விட்டது. இருப்பினும், மீனவர் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு மிக எளியவழி, வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் வலியுறுத்துவதைப்போல, இராமேஸ்வரம் பகுதியில் இழுவைப் படகுகளுக்கு இந்திய அரசு தடைவிதிக்க வேண்டும் என்பதே. இந்த விவகாரத்தில் இலங்கை அரசு, இந்திய அரசு, வடக்கு மாகாண அரசு மூன்றும் இணைந்து செயல்படுவதே சரியானதாக இருக்கும். அரசாங்க உறவுக்கு மற்ற ஒப்பந்தங்கள் முக்கியமானவை என்றாலும், தமிழக மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு மத்திய அரசு அழுத்தம் தரவில்லையா அல்லது இலங்கை அதிபர் சிறீசேன இதில் ஆர்வம் காட்டவில்லையா என்பதைத் தீர்மானிக்க இயலவில்லை.

இனப்படுகொலை தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அண்மையில் இலங்கை வடக்கு மாகாண அரசு நிறைவேற்றி இருக்கும் தீர்மானம், சிறீசேன தலைமையிலான அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதாக செய்திகளும், பேட்டிகளும் குறிப்பிட்டாலும், இந்த அறிவிப்பு வடக்கு மாகாணத் தமிழர்களின் உணர்வு வெளிப்பாடே தவிர, அதிபர் சிறீசேன மீதான நம்பிக்கையிழப்போ அல்லது நெருக்கடி தரும் நோக்கமுடையதோ அல்ல என்பதை வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் தெளிவுபடுத்தியுள்ளார். சிறீசேன அமைச்சரவையும் வடக்கு மாகாண அரசின் தீர்மானத்தை எதிர்மறையாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதன் வெளிப்பாடாக, இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் பகுதியில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பது என்ற முடிவை அமைச்சரவை மேற்கொண்டுள்ளது. மேலும், யாழ்ப்பாணம் அருகே, வலிகாமத்தில் உருவாகி வரும் மாதிரிக் கிராமத்தில் 1,022 குடும்பங்களை குடியமர்த்தவும் தீர்மானித்துள்ளது. இத்தகைய சூழலில் இந்தியா வந்த சிறீசேனவிடம் இலங்கைத் தமிழர் வாழ்வாதாரம் குறித்து அழுத்தம் தரவேண்டிய அவசியம் இந்தியாவுக்கு இருந்தது. ஒருவேளை அடுத்த மாதம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை செல்லவிருப்பதால், அந்தப் பயணத்தின் வெற்றிக்காக இத்தகைய ஒப்பந்தங்கள் கையெழுத்திடாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனவோ என்று கருதவும் இடமிருக்கிறது.

இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவது மட்டுமே இந்திய அரசின் நோக்கமாக இருக்கிறது. இருப்பினும், இலங்கையில் குடியமர்த்துதல் பணிகள் முழுமையாக முடிந்த பிறகே இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று தமிழக அரசு பிரதமருக்கு கோரிக்கை வைத்துள்ளது. தமிழக சட்டப்பேரவையில் பெப்ரவரி 17, 2015 இல் உரையாற்றிய ஆளுநர் ரோசய்யா, “இலங்கையில் இடம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்ட பின்னரே, இங்கு அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்புவது குறித்து சிந்திக்க வாய்ப்பு ஏற்படும் என்பதே தமிழக அரசின் கருத்து” என்பதை ஆணித்தரமாக முன்வைத்துள்ளார். இலங்கையில் மறுகுடியமர்த்துதல் என்பது மிகவும் சிரமமான பணியாக இருந்து வருகிறது. யாருடைய நிலம், யாருக்குச் சொந்தமானது, யார் யாருடைய வாரிசு என்பதெல்லாம் தேடிக்கண்டடைய முடியாத விடயங்களாக இருக்கின்றன. இந்தச் சிக்கல்களை முன்வைக்கும் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன், இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகள் தாயகம் திரும்பினால் இன்றைய சூழலில் அவர்களுக்கும் சேர்த்து வீடுகள் கட்டி, மறுகுடியமர்த்துதல் சிரமம், அவர்களது குழந்தைகளுக்கு இந்தியாவில் கிடைக்கும் சிறந்த கல்வியை இங்கே கிடைக்கச் செய்வதும் இயலாதது என்று ஒப்புக்கொள்கிறார். ஆனால், அவர் மற்றொரு வாதத்தையும் முன்வைக்கிறார். அவர்கள் திரும்பி வந்தால், சிங்களவர் குடியேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பார்கள் என்பதுதான் அது.

தற்போதைய சிறீசேன அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை தமிழ் தேசிய கூட்டமைப்பு வழங்கியிருப்பதாலேயே, சிங்களவர் குடியேற்றம் நின்றுவிடும் என்று சொல்லிவிட முடியாது. இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து சிங்களவர் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தும் வல்லமை கொண்டதாக வடக்கு மாகாண அரசு இல்லை என்பதை நாம் மறந்துவிடலாகாது. இந்த நிலையில், தாயகம் திரும்ப விரும்பும் இலங்கை அகதிகளுக்கு அங்கே முதல் கட்டமாக வீடுகள், காணிகள் ஒதுக்கப்படவும், அதை இப்போதே பத்திரப்பதிவு செய்து தரவும் வேண்டும். வீடுகள் கட்டி முடிக்கப்படும் வரை இந்தியாவில் உதவித் தொகையுடன் தங்கியிருக்கவும், வீடுகள் கட்டி முடித்த பிறகு குடிபெயரச் செய்யவும் வேண்டும். அவர்தம் குழந்தைகள் இங்கே உயர் கல்வி படித்துக் கொண்டிருந்தால், அவர்கள் படித்து முடிக்கும்வரை குடும்பமோ அல்லது குழந்தைகள் மட்டுமோ இங்கு தங்கியிருக்கவும் வகை செய்ய வேண்டும். இத்தகைய அணுகுமுறைகள், தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கு வலியற்றதாகவும், இயல்பானதாகவும் அமையும்.

# இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனவின் இந்திய பயணம் யாருக்கு வெற்றி?

இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை கடந்த மாதம் வெற்றிகரமாக முடித்திருக்கிறார். இந்தப் பயணம் பெரியளவிலான எதிர்பார்ப்பை இந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்படுத்தியிருந்தது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் கடந்த சில ஆண்டுகளாக நீடித்து வந்த முரண்பாடுகளுக்கு முடிவுகட்டும் இந்தப்பயணத்தில், இரு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான உறவு ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இலங்கையிடம் காணப்பட்ட எதிர்பார்ப்புகளை விட இந்தியாவிடம்தான் கூடுதலான எதிர்பார்ப்புகள் காணப்பட்டன. இந்தியாவிடமிருந்து வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பு, மீனவர்கள் விவகாரத்துக்கான தீர்வு ஆகியவற்றுடன், சர்வதேச அரங்கில் இந்தியாவின் ஆதரவு என்பனவற்றைத்தான் இலங்கை எதிர்பார்த்திருந்தது.

இதில் முக்கியானது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு எதிராகச் செயற்படும் விடயத்தில் இந்தியாவின் ஆதரவை இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது.

ஆனால், இந்தியாவுக்கோ இலங்கையிடம் பல எதிர்பார்ப்புகள் இருந்தன. சீனாவின் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் பற்றிய அச்சத்துக்கு முடிவு கட்டுதல், சீன நீர்மூழ்கிகளின் வருகைக்கு முடிவு கட்டுதல், இருதரப்பு வர்த்தகம், ஒத்துழைப்பை விரிவாக்கிக் கொள்வது உள்ளிட்ட பல எதிர்பார்ப்புகள் இந்தியாவிடம் காணப்பட்டன. இவற்றுக்கு மத்தியில்தான் இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனவின் இந்தியப் பயணம் இடம்பெற்றிருந்தது. இந்தப் பயணத்தின்போது, இருநாடுகளுக்குமிடையில் அணுசக்தி ஒத்துழைப்பு உடன்பாடொன்று கையெழுத்திடப்பட்டுள்ளது. இதுதவிர வேறு மிக முக்கியமான எந்தப் புரிந்துணர்வு உடன்பாடுகளும் செய்து கொள்ளப்படவில்லை. ஏனைய மூன்று உடன்பாடுகளும் பெரியளவில் முக்கியத்துவமற்ற விடயங்கள் ஆகும்.

அணுசக்தி ஒத்துழைப்பு உடன்பாட்டில் இலங்கையுடன் கையெழுத்திட்ட விவகாரத்தை இந்தியா மிகப்பெரிய

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

NEW SHADI நகைத் தொழிலகம்
Specialized In Jewellery Making & Custom Desigh Watch Repairing.
• நீங்கள் விரும்பும் 22 கரட் தங்க, வைர நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
• உடனுக்குடன் உங்கள் முன்னிலையில் உங்களது நகைத்திருத்த வேலைகள் அதிநவீன லேசர் தொழில் நுட்பத்தில் செய்து தரப்படும்.
• கைக்கடிகாரங்கள் திருத்திக்கொடுப்பதோடு பற்றரியும் மாற்றிக் கொடுக்கப்படும். Contact: 416.335.1040

585 Middlefield Rd., #15 Scarborough, ON M1V 4Y5

MATH, SCIENCE & ENGLISH TUITION
Math & Physics taken for all grades from grade 4 to 1st year university.
Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at
Scarborough & Stouffville

Contact: 647.340.9490/ 416.732.2228

# நாமும் நமது...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

| நகரம் | விலை அதிகரிப்பு |
|---|---|
| நியூயோர் | 18.8% |
| லொஸ் ஏஞ்சல்ஸ் | 13.0% |
| சிட்னி | 11.0% |
| பெங்களூர் | 10.1% |
| வன்கூவர் | 7.5% |
| ரொறொன்ரோ | 7.1% |
| மும்பாய் | 2.9% |
| டெல்லி | 1.8% |
| பீஜிங் | 0.5% |

**வோட்டலூ ஆதன முதலீட்டிற்கு சிறந்ததாகலாம்?**

Colliers International இன் அறிக்கையின் வெளிப்பாடு, எதிர்காலத்தில் Waterloo பெரும்பாகம் ஆதன முதலீட்டிற்கு சிறந்த பகுதியாக அமையலாம் எனத் தெரிய வருகின்றது. புதிய போக்குவரத்திற்கான சேவை, Black Berry நிறுவன தலைமை யகத்தினால் தொழில் புரிபவர்களின் இருப்பிடம், மக்கள் தொகையின் அதிகரிப்பு போன்ற காரணங்கள் எதிர்காலத்தில் வோட்டலூவில் வியாபாரத்திற்கான சூழ்நிலை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இலங்கை...

வெற்றியாக காட்டுகிறது. இது சீனாவின் பக்கத்திலிருந்து இலங்கையைத் தமது கைக்குள் கொண்டு வருகின்ற முக்கிய நகர்வென்று இந்தியத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனாலும், இப்போதைய நிலையில், இந்த உடன்பாடு, இந்தியாவுக்கு பெரிய அனுகூலங்கள் எதையும் ஏற்படுத்தப் போவதில்லை. இலங்கை அணு உலைகளை அமைத்து மின் உற்பத்திக்கோ வேறு தேவைகளுக்கோ பயன்படுத்தும் திட்டம் எதையும் தற்போது கொண்டிருக்கவில்லை. அடுத்த 15 ஆண்டுகளுக்கு அணு உலைக-ளைக் கட்டும் திட்டம் ஏதும் இலங்கையிடம் அவசியமானவை, பயன்மிக்கவை என்று கூறத்தக்கவையல்ல. உதாரணத்துக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகம், மாத்தள விமான நிலையம் என்பனவற்றை எடுத்துக் கொள்ளலாம். அவை, மக்களின் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்டவை என்பதை விட, சீனாவின் நலன் மற்றும் முன்னைய அரசாங்கத்திலிருந்தவர்களின் நலனுக்காக அமைக்கப்பட்டவை என்பதே சரியானது. எனவே, ஏற்கனவே பல தேவையற்ற திட்டங்களில் முதலீடுகளைக் கொட்டியது போலவே, சீனா அணு உலை-களை அமைக்கும் விவகாரத்திலும் முந்திக் கொள்ளலாம் என்ற கவலை இந்தியாவுக்கு இருந்தது. தனக்கு நெருக்கமான இடத்தில், சீனா அணு உலைகளை அமைப்பதைத் தடுப்பதற்காகவே இந்தியா இந்த



இல்லை என்ற நிலையில், இந்தியாவுக்கு பெரிய பொருளாதார இலாபம் ஏதும் இதன் மூலம் கிடைக்காது. சாதாரணமாக இலங்கை அதிகாரிகளுக்கு பயற்சி அளித்தல் உள்ளிட்ட சில விடயங்கள்தான் இப்போதைக்கு இந்த உடன்பாட்டினால் ஆகப்போகின்ற காரியம்.

எனினும், இந்தியா இந்த உடன்பாட்டை ஏன் அவசரப்பட்டு செய்தது என்றால், பாகிஸ்தானில் அணு உலைகளை அமைத்துக் கொடுக்கும் சீனா, இலங்கையிலும் கால் வைத்து விட்டால் ஆபத்தாகி விடும் என்பதனால்தான். இலங்கையில் சீனாவின் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் எல்லாமே,

உடன்பாட்டை செய்திருக்கிறது. இப்போது அணுசக்தி விவகாரத்தில், என்ன தேவை ஏற்பட்டாலும், இந்தியாவிடம்தான் இலங்கை ஓட வேண்டும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட அணுசக்தி உடன் பாட்டை அமெரிக்காவும் வரவேற்றிருக்கிறது. அதைவிட வேடிக்கையான விடயம் என்னவென்றால், இதனை சீனாவும் ஆக்க பூர்வமானது என்று வரவேற்றுள்ளதுதான். இந்தியா, இலங்கை, சீனா என்று முக்கோண உறவுகளை பலப்படுத்தினால் ஆசியப் பிராந்தியத்தில் பாதுகாப்பு, உறுதிப்பாடு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்


**Computek College**

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

Enroll in a Diploma Course and receive a FREE Laptop

(Offer valid until March 31, 2015 - Some Conditions apply)



Markham Campus Students receiving Free Laptops



Scarborough Campus Students receiving Free Laptops

SECOND CAREER, SOCIAL ASSISTANCE RECEIPIENTS, NEW IMMIGRANTS, UNEMPLOYED/ UNDEREMPLOYED CLIENTS WELCOME!

**DIPLOMA COURSES**

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Network Engineering | 35 wks |
| Personal Support Worker | 32 wks |
| Medical Office Admin | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES* (WEEKEND / EVENING)

Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

* These programs do not require approval under the Private Career Colleges Act, 2005

WWW.COMPUTEK.EDU

Financial assistance may be available for those who qualify

Toronto Campus 301-2347, Kennedy Rd. (Kennedy/Sheppard) 416-321-9911

Markham Campus 202 - 7 Eastvale Drive. (Markham / Steeles) 905-471-3344

Scarborough Campus 248-2380 Eglinton Ave E Kennedy/Eglinton) 416-285-9941





# இலங்கை...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பன வலுப்படுத்தப்படும் என்று சீனா கூறியிருக்கிறது. ஆனால் இந்த விடயத்தில் சீனாவை நம்புவதற்கு இந்தியா தயாராக இல்லை. அதனால்தான், சார்க் அமைப்புக்குள் கால்வைக்கும் சீனாவின் முயற்சிக்கு ஆரம்பத்திலேயே தடை போட்டுவிட்டது இந்தியா. அதைவிட இந்தியப் பெருங்கடலில் சீனாவின் மேலாதிக்கத்துக்கு முடிவுகட்ட ஆறு அணுசக்தி நீர்மூழ்கிகளை கட்டும் புதிய திட்டத்துக்கும் ஒப்புதல் அளித்துள்ளது, வெளிப்படையாக இந்தியாவும் சீனாவும் நட்புறவாக இருப்பதுபோல காட்டிக் கொண்டாலும் இரண்டு நாடுகளுமே ஒன்றையொன்று நம்பத் தயாராக இல்லை. இந்த உறவுச் சிக்கலுக்குள் சிக்கிக் கொள்ளாமல் தப்பிக் கொள்வது இலங்கையின் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. முந்திய மஹிந்த ராஜபக்ச அரசாங்கம், சீனாவின் பக்கமே அதிகம் சார்ந்து நின்றது. அதனால் இந்தியாவுடன் உறவுகளை சீரானமுறையில் பேணவோ வலுப்படுத்தவோ முடியாது போனது. ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு முன்னைய அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு முற்றிலும் முரணானது. எந்தப்பக்கமும் சாராமல் இருதரப்புக்கும் பொதுவான நடுநிலை நிலைப்பாட்டைப் பேணுவதே தனது வெளிவிவகாரக் கொள்கை என்கிறது புதிய அரசாங்கம்.

அதாவது அணிசேராக் கொள்கையை முழுமையாக கடைப்பிடிப்பதே புதிய அரசின் கொள்கை என்று கூறப்படுகிறது. இந்தியாவோ, ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர் இலங்கையில் தனது செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்ளலாம், சீனாவின் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டி விடலாம் என்றே எதிர்பார்த்தது. ஆனால் இந்த விடயத்தில் இலங்கையின் புதிய அரசாங்கத்தின் நகர்வுகள் இந்தியாவுக்கு திருப்தி அளிக்கும் வகையில் அமைந்திருக்கவில்லை என்பதே உண்மை. இலங்கைக்கு அடிக்கடி பயணம் மேற்கொள்ளத் தொடங்கிய நீர்மூழ்கிகள் விவகாரத்தில் இந்தியாவின் எதிர்பார்ப்புக்கு முரணாகச் செயற்பட புதிய அரசாங்கம் தயாராக இல்லை. இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தினால் அது தமது ஆட்சிக்கு ஆபத்தாகும் என்பதை தற்போதைய அரசாங்கம் நன்கறியும். இந்தியாவின் பாதுகாப்புடன் விளையாட முற்பட்டதால்தான், மஹிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டார் என்ற கருத்து அரசியல் மட்டத்தில் காணப்படுகிறது. எனவே இந்தியாவின் பாதுகாப்புடன் தற்போதைய அரசாங்கம் ஒருபோதும் விளையாட முனையாது என்பது நிச்சயம். எனவே இனிமேல் சீன நீர்மூழ்கிகள் கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்த முனையும் என்று எதிர்பார்க்க முடியாது. அடுத்து இந்தியாவுக்குள்ள முக்கியமான சிக்கல் கொழும்புத் துறைமுக நகரத் திட்ட விவகாரம் தான். 1.5 பில்லியன் டொலரைச் செலவிட்டு சீனா உருவாக்கும் இந்த கடல் நகரத்தில் 20 ஹெக்ரெயர் நிலப்பரப்பு சீனாவுக்கு சொந்தமாகப் போகிறது என்பதுதான் இந்தியாவின் மிகப் பெரிய கவலை. இந்தியாவுக்கு அருகே சீனாவுக்குச் சொந்தமான ஒரு நிலப்பரப்பு உருவெடுப்பதன் ஆபத்தை இந்தியா வலுவாக உணர்கிறது. எனவே கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் முன்னெடுக்கப்படுவதை இந்தியா விரும்பவில்லை.

புதிய அரசாங்கம் பதவிக்கு வர முன்னர் இந்த திட்டத்தை இடைநிறுத்துவதாக வாக்குறுதி அளித்திருந்தாலும் பதவிக்கு வந்த பின்னர் அத்தகைய முடிவை எடுக்க முடியாமல் திணறுகிறது. ஒரு பக்கத்தில் இந்தியா இந்தத் திட்டத்தை நிறுத்துமாறு நச்சரிக்கிறது. மறுபக்கத்தில் சீனா இதனை நிறுத்தினால் ஆபத்தில் சிக்க நேரிடும் என்று எச்சரிக்கிறது. இரண்டு தரப்புக்கும் நடுவே இந்த விவகாரத்தை கையாள்வதில் புதிய அரசாங்கம் நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. மைத்திரிபால சிறிசேனவின் இந்தியப் பயணத்தின்போது, இதுகுறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தியா விடம் பிடிகொடுக்காமல் நழுவியிருக்கிறார் இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன. கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை உடனடியாக நிறுத்த முடியாது. ஏற்கனவே 25 வீதமான கட்டுமானப் பணிகள் முடிந்திருக்கின்றன. அதற்காக சீனா பெருமளவு பணத்தைச் செலவிட்டுள்ளது. எனவே அது இந்தக் கட்டத்தில் நிறுத்தினால் சீனாவுடனான உறவுகள் பாதிக்கப்படும் என்பதுடன் சீனா செலவிட்ட நிதியையும் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். கடலுக்குள் சீனா கொட்டி நிரப்பிய மண்ணுக்கும் கல்லுக்கும் காசைக் கொடுக்க இலங்கை தயாராகவும் இல்லை. அதற்கான காசும் இலங்கையிடம் இல்லை. எனவே திட்டத்தைத் தொடர அனுமதிக்கப் போவதாக மைத்திரிபால சிறிசேன இந்தியாவிடம் கூறியிருக்கிறார். ஆனாலும் சீனாவுக்கு சொந்தமாக நிலத்தைக் கொடுக்கும் உடன்பாட்டு விதிகளில் மாற்றம் செய்வது குறித்து பேசுவதாகவும் அவர் உறுதியளித்திருக்கிறார்.

பெப்ரவரி 27, 28 ஆம் திகதிகளில் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்த விவகாரம் குறித்துப் பேசவுள்ளார். இந்தத் திட்டத்தை மீளாய்வு செய்வதற்கு சீனா இணங்கியிருந்தாலும், உடன்பாட்டு விதிகளில் மாற்றம் செய்வதற்கு அது இணங்குமா என்பது முக்கியமான கேள்வி. 20 ஹெக்ரெயர் நிலப்பரப்பை சீனாவுக்கு சொந்தமாக்க அனுமதிப்பதற்குப் பதிலாக அதனை 99 வருட குத்தகைக்கு வழங்குவதாக இணங்க வைக்க முயற்சிப்பதாக இந்தியாவிடம் கூறியிருக்கிறார் மைத்திரிபால சிறிசேன. ஆனால் சீனா அதற்கு இணங்க வேண்டும். மிகப்பெரியளவு முதலீட்டை செய்துவிட்டு ஒதுங்கிக் கொள்வதற்கு சீனா தயாராக இருக்காது. இதுகுறித்து கருத்து வெளியிட்ட கொழும்பிலுள்ள சீனத்தூதரக அதிகாரி ஒருவர் முன்னைய அரசாங்கம் இன்னொரு நாட்டுடன் செய்து கொண்ட இருதரப்பு உடன்பாடுகளை நிறைவேற்ற வேண்டியது புதிய அரசாங்கத்தின் பொறுப்பு என்று கூறியிருக்கிறார். இது சீனாவின் விட்டுக்கொடுப்பு எந்தளவுக்கு இருக்கும் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. பெப்ரவரி மாத இறுதியில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், மார்ச் மாத இறுதியில் இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனவும் மேற்கொள்ளவிருக்கும் சீனப் பயணங்களின் போது இந்த விவகாரமே உச்சக்கட்டமான பேசுபொருளாக இருக்கப்போகிறது. அதே வேளை இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனவின் இந்தியப் பயணம் இலங்கைக்குச் சாதகமாகவே அமைந்திருக்கிறது.



சர்வதேச அரங்கில் இலங்கைக்கு ஆதரவு தர குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச விசாரணை முயற்சிகளைத் தடுக்கஉதவுவதாக இந்தியா வாக்குறுதி கொடுத்திருக்கிறது. இருதரப்பு வர்த்தகம், சுற்றுலாத்துறைகளை விரிவாக்க வும் இணங்கியுள்ளது. அவ்வாறாயின் பதிலுக்கு இலங்கை என்ன வாக்குறுதி களைக் கொடுத்திருக்கிறது? இலங்கை யிடமிருந்து இந்தியாவினால் எந்த வாக்குறுதியையும் பெற முடியவில்லை என்கின்றன புதுடெல்லி வட்டாரங்கள்.

மூன்று மணிநேரம் பேசியும் எந்த வாக்குறுதியையும் மைத்திரிபால சிறிசேன கொடுக்கவில்லையாம். புதிய அரசாங்கம் பதவியேற்று சில வாரங்கள் தான் ஆகியுள்ளன, அடுத்த தேர்தல் போன்ற காரணங்களைக் காட்டி எந்த வாக்குறுதியை யும் கொடுக்காமல் நழுவிட்டதாக புதுடில்லி வட்டாரங்களில் கூறப்படுகின்றன. தமிழர் பிரச்சினைக்கான தீர்வு, 13வது திருத்தச்சட்ட விவகாரம், அகதிகள் விவகாரம் என்பனவும் கூட அமுங்கி விட்டன.

ஆக, இந்தியா அணுசக்தி உடன்பாட்டை செய்து கொண்டதைத் தவிர, மைத்திரிபால சிறிசேனவின் பயணத்தின் மூலம் இந்தியா வினால் வேறு எதையும் அடைய முடிய வில்லை. ஆனால் இலங்கை அரசாங்கத்தினால், இந்தியாவிடம் இருந்து நிறைய விடயங்களை சாதித்துக் கொள்ள முடிந்திருக்கிறது. மகிந்த ராஜபக்சவின் நிலையுடன் ஒப்பிடுகையில் ஒருவகையில் இது மைத்திரிபால சிறிசேனவின் சாதனை-தான்.

# அன்புடைமை - 13

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஆசாரக்கோவை என்ற நீதி நூல் கயத்தூர் பெருவாயின் முள்ளியார் அவர்களால் இயற்றப்பட்டது. ஆசாரக் கோவை என்றால் ஆசாரங்களின் கோவை என்று பொருள் கூறலாம். இந்த நூலில் காணப்படும் நூறு செய்யுட்களில் பொதுவகையான ஒழுக்கங்கள், நித்திய கடமைகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

'துன்பத்துள் துன்புற்று வாழ்தலும், இன்பத்துள்
இன்ப வகையான் ஒழுகலும், அன்பின்
செறப்பட்டார் இல்லம் புகாமை, - இம் மூன்றும்
திறப்பட்டார் கண்ணே உள.'

என்று வரும் ஆசாரக்கோவை நூலின் 79 வது செய்யுளில் அன்புடைமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. 'துன்பம் வந்த காலத்திலும், இன்பம் வந்த காலத்திலும் அமைதியாக இருத்தலும் அன்பினின்று வேறுபட்டவர் வீட்டில் நுழையாமையும் பெரியாரிடத்தில் உண்டு.' என்றவாறு உரையாசிரியர் பாலசங்கரன் இந்தச் செய்யுளிற்கு விளக்கம் கொடுத்துள்ளார். அன்புடைமை இல்லாத வீட்டுக்குப் பெரியார்கள் போக மாட்டார்கள் என்று கூறுவது அன்புடைமையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றது. காலையில் எழுந்து ஒரு நிமிடத்தில் புன்னகை செய்தால் இந்த நாள் நன்றாக இருக்கும் என்று கூறுவதையும் கேள்விப்பட்டிருக்கின்றேன். புன்னகை



என்பது நல்ல மூலதனம். எவ்வளவுக்கு அதிகமாக இந்த மூலதனத்தை சேர்க்கின்றீர்களோ அவ்வளவுக்கு நீங்கள் நல்ல உணர்வைக் கொண்டிருப்பீர்கள் என்றும் கூறப்படுகின்றது. காலையில் புன்னகை தாங்கி எழுந்து கொள்ள வேண்டும். நிறைந்தளவு வாய்ப்புக்களும், ஆசிகளும் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு உங்கள் இதயத்தை திறந்து கொள்ள வேண்டும். உங்கள் புன்னகை, உங்களில் காணப்படுவதால் பதில் உணர்வு காட்டும் பலரை நீங்கள் சந்திக்கப் போகின்றீர்கள். இன்றை தினத்தில் ஒருவர் கூறுவதைக் கேட்கவும், ஒருவரைச் சந்திக்கவும் தயாராகுங்கள். மற்றவர்களை உங்களின் விம்பமாக நினைத்துக் கொள்ளுங்கள். உங்களிற்கு இருக்கும் விருப்பம், தேவைகள், பிரச்சினைகள் அவர்களிற்கும் இருக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். காலையில் எழுந்து கொள்ளும் பொழுது இன்று ஒரு நல்ல விடயம் நடக்கும் என்ற நம்பிக்கையோடு எழும்புங்கள். பின்பு இன்றைய நாள் நிறைவடையும் பொழுது இன்று நடந்த நல்ல விடயங்களிற்காக நன்றி செலுத்திக் கொள்ள வேண்டும்.

திச் நற் கான் அவர்கள் இன்றைய உளவியல் (Psychology Today) என்ற இணையத் தளத்தில் 'சில நேரங்களில் எங்கள் மகிழ்ச்சியே புன்னகைக்கான மூலப்பொருள் ஆகவும், சில நேரங்களில் புன்னகையே மகிழ்ச்சிக்கான மூலப்பொருள் ஆகவும் உள்ளது.' என்று குறிப்பிட்டுள்ளார். இது மிகவும் பொருத்தமான கூற்று என்றே நான் நினைக்கின்றேன். விஞ்ஞானிகளும், ஆன்மீக வாதிகளும் சாதாரணமான நடவடிக்கை ஒன்று எம்மிலும், எம்மைச் சுற்றியுள்ள உலகத்திலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளது என கூறியுள்ளனர் நாம் ஒருவரைப் பார்த்து புன்னகை செய்யும் பொழுது எம்மை விசேடமாகக் கவனிப்பார்கள் என்று கூறப்படுகின்றது. புன்னகை செய்யும் பொழுது இரண்டு முக்கியமான தசைகளை தொழிற்படுத்துகின்றோம். முதலாவது வாயின் முடிவுப் பகுதிகளைக் கட்டுப்படுத்துகின்றது. இது மட்டும் எற்படுவதை சமூகப் புன்னகை என்போம். இது ஒரு உண்மையான புன்னகை இல்லை. இரண்டாவது தசை எமது நேர்மைத் தன்மையை வெளிப்படுத்துவதோடு கண்ணில் புலப்படும் தன்மையையும் கொடுக்கும். காலையில் படுக்கையை விட்டு எழுந்து கொள்ளும்போதே புன்னகை செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டாலும் சராசரியாக ஒருவர் காலை 11 மணியளவில் தான் முதலாவது புன்னகையைத் தவழ விடுகின்றார்கள் என ரெலிகிராப் கட்டுரை ஒன்று தெரிவிக்கின்றது. ஜெர்மனியில் கோதன்பேர்க் பல்கலைக்




கழகத்தில் நடைபெற்ற ஆய்வில் ஒரு வாரத்தில் ஞாயிற்றுக்கிழமையே அதிகம் மனவழுத்தம் உள்ள நாளாகப் பார்க்கப்படுகின்றது. அன்னை திரேசா 'புன்னகையில் இருந்தே அமைதி பிறக்கின்றது' என்றார்.

அன்னை திரேசா 'மற்றவர்களைப் பார்த்து புன்னகை செய்யும் ஒவ்வோரு தடவையும் அன்பு என்னும் ஒரு அழகான பரிசை வழங்குகின்றீர்கள்' என்று குறிப்பிட்டுள்ளார். இதில் இருந்தே அன்புடைமைக்கும் புன்னகைக்கும் உள்ள தொடர்பு நன்கு புலனாகின்றது. அவர் மேலும் 'நாங்கள் எல்லோருடனும் புன்னகையைப் பரிமாறிக் கொள்வோம். புன்னகையே அன்பின் ஆரம்பம்" என்று தெரிவிக்கின்றார். இரக்கம் என்பது அன்பின் ஒரு வடிவமாகப் பார்க்கலாம். ஆண்டவனின் இரக்கத் தன்மையின் வெளிப்பாடாக இருங்கள், உங்கள் முகத்தில் இரக்கம் இருக்கட்டும், கண்ணில் இரக்கம் இருக்கட்டும், உங்கள் புன்னகையில் இரக்கம் இருக்கட்டும்' என்றும் அன்னை திரேசா கூறியுள்ளார். காலையில் ஒரு புதிய நாள் ஆரம்பமாகின்றது. இந்த நாளை புன்னகையுடன் ஆரம்பியுங்கள். நேற்றைய தினம் சரியாக அமையாவிட்டாலும் நம்பிக்கையுடன் புதிய நாளை எதிர் கொள்ளுங்கள். உங்கள் மீது அன்பு கொண்டவர்களை நினைத்துப் புன்னகை செய்யுங்கள். உலகத்தில் போதியளவு துயரங்கள் உள்ளன. அதனால் புன்னகையுடன் மகிழ்ச்சியாக நாளை ஆரம்பியுங்கள். இந்த உலகிற்கு உங்கள் புன்னகையும், மகிழ்ச்சியுமே தேவைப்படுகின்றது. புன்னகை என்பது நோவில்லாது மனக்கோளாறுக்கு கொடுக்கக்கூடிய சிகிச்சை முறை என்றாலும் பாரிய மன அழுத்தத்தை சுகமாக்கும் என்று எண்ண முடியாது என அறிஞர்கள் கூறியுள்ளார்கள். காலையில் நேரத்திற்குத் தூக்கத்தில் இருந்து எழும்புபவர்களில் புன்னகையும், மகிழ்ச்சியும் மற்றவர்களைவிட அதிகமாக இருக்கும் என ஆய்வுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. முகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கும் எமது உணர்ச்சிகளுக்கும் தொடர்பு உண்டென்பதால் புன்னகை எனப்படும் முகத்தில் தோன்றும் மாற்றம் உணர்ச்சிகளை மாற்றக்கூடியது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

நன்றி. வணக்கம்.
தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants, etc.
Store - Tel : 416.289.7514 / Owner Sam - Cell: 416.732.9383
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm



# வீடுகள் வாங்க விற்க......



## AJAX
**DELANEY/ RADFORD**
3 Bedroom house for sale.
2 Washroom, 1 kitchen.
Close to all facilities.
Price: $379,900



## SCARBOROUGH
**MEADOWVALE & SHEPPARD**
3 Bedroom house for sale.
2 Washroom, 1 kitchen.
Close to all facilities.
Price: $444,900



## MARKHAM
**MIDDLEFIELD & STEELES**
3 Bedroom house for sale.
3 Washroom, 1 kitchen.
Close to all facilities.
Price: $569,900

People Who Are Selling & Buying House From Me,
***MY LISTING COMMISION IS FREE!!!!!!!!***




This Offer Valied Until 30th JuneE 2015 Only

Friendly services, Free Evolution, Free marketing, and Ect. services



FOR ONLY HOME BUYERS FREE TICKETS TO SRILANKA OR CUBA FOR MORE DETAIL CALL ME!
HONEST AND TRUST



**நாளை என்பது கனவு. இன்று என்பது நிஜம்!!!!!.**

நீங்களும் முதலீட்டாளர்கள் ஆகி மிகவும் குறுகிய காலத்தில் மிக அதிக லாபத்தை அடைய விரும்புகிறீர்களா? அழையுங்கள். என்னை. இலவச அதி சிறந்த ஆலோசனைகளுடனும் சகல ஏற்பாடுகளையும் மிகவும் நுண்ணியமாகவும், துல்லியமாகவும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.




# Lourdson Antonipillai
**Sales Representative**

**Dir: 416.738.8824**
E-mail - lourdson29@hotmail.com

**HomeLife / Future Realty Inc., Brokerage***
205 - 7 Eastvale Dr. Markham. ON L3S 4N8
Bus:905.201.9977
Fax: 905.201.9229


HOMELIFE HIGHER STANDARDS

* Independently Owned & Operated

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

எமது வாழ்க்கையை சீராக அமைத்துக் கொள்ள, நோய்கள் தாக்கதிருக்க பயனுள்ள வழிமுறைகளைக் கையாள வேண்டும். ஒருவர் உடலைத் தேற்றும் ஓய்வு தேவை. அவசரப்படாது உணவை உண்ண வேண்டும். காரமான உணவுப் பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். உண்டவுடன் உறங்குதல், நீராடுதல் நன்றன்று. ஓய்வு முக்கியமாகும். புகைபிடித்தல், போதைப்பொருட்கள் பாவித்தல் தவிர்க்கப்படல் வேண்டும். இவை ஒருவருக்கு முக்கியமானதாகும்.

மேலும் சில வியாதிகளைப் பற்றிப் பார்ப்போம். எமக்கு நோய் வராது தடுப்பதற்கு வழிமுறைகள் உண்டு. நீரிழிவு நோயை எடுத்துக்கொண்டால் பரம்பரையாக வரும் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன. தாய், தந்தையருக்கு இப்படியான வியாதி இருந்தால் அது நம்மைச்சார்ந்து விடும். இதனைத் தவிர்த்துக்கொள்ள தங்கள் குடும்ப வைத்தியரிடம் சென்று பரீட்சித்துக் கொள்ள வேண்டும். தற்பொழுது இந்நோய் எமக்கு இல்லாது விட்டாலும் முன்னுக்கு பரீட்சிப்பதினால் நற்பயன் பெறமுடியும். வருடத்திற்கு இருமுறையாவது பரீட்சிப்பது உத்தமாகும்.

மேலும் இப்படிப்பட்டோர் எங்களுக்கு இந்நோய் இல்லைத்தானே எனக்கருதி உணவு விடயங்களில் கண்ணும் கருத்தும் இல்லாதிருப்பர். அதிக அளவான உணவு, இனிப்பு வகைப்பண்டங்களை தவிர்ப்பதுடன் நார்ச்சத்து பொருந்திய உணவு ஆகாரங்களை அளவின்படி பாவித்து தகுந்த வயதிற்கு ஏற்ப உடற்பயிற்சி செய்து வருதல் வேண்டும். இதனால் எமது எடை அதிகரிக்காது பாதுகாத்துக் கொள்ள முடியும். பொதுவாக



இந்நோய் இருந்தால் மேற்கூறியவற்றை கையாண்டு வருதல் வேண்டும்.

குடும்பத்தில் தாய் தகப்பனுக்கு நீரிழிவு நோய் (Diabeties) இருந்தால் அக்குடும்பம் சம்மந்தப்பட்டவருக்கு கருச்சிதைவு ஏற்பட இடமுண்டு. ரியவருக்கு கர்ப்பம் தரிக்கும் போது கர்ப்பத்தில் உள்ள சிசுவிற்கு நீரிழிவு நோய் வருவதற்கு இடம் உண்டு. எனவே அடுத்தடுத்து கற்பம் தரிப்பதற்கு இடம் அளிப்பது நன்றன்று.

அடுத்து பக்கவாதம். இதனை பாரிசவாதம் (apopleksi) எனவும் அழைப்பர். இந்நோய் ஏற்படாதிருக்க புகைப்பிடிப்பதை முக்கியமாக தவிர்த்தல் வேண்டும். புகையிலையின் புகையானது எம்மை கூடுதலாகத் தாக்கும் தன்மையுடையது. தங்கள் வைத்தியர்களிடம் சென்று இரத்த அமுக்கத்தை (B.P) தவறாது பரிசோதித்து வருதல் வேண்டும். உயர் இரத்த அழுத்தம் எம்மை அறியாமலே உடன் ஏற்படும் இயல்புடையது. எனவே எம்மீது கண்ணும் கருத்துமாக நாம் இருந்து வருதல் வேண்டும். நாம் உண்ணும் உணவில் உப்பைக் குறைத்துக்கொள்வது நன்று. கொழுப்புச்சத்து அடங்கிய உணவு வகைகளை தவிர்ப்பது உத்தமாகும்.

சிறுநீரகக் கற்கள் உண்டாகும் தன்மையை தவிர்ப்பதற்கு வழியுண்டு. அதாவது ஒருவர் முக்கியமாக தண்ணீர் தவறாது வேண்டி யளவு பாவித்து வருதல் வேண்டும். சுண்ணாம்புச் சத்துள்ள உணவுகளை தவிர்த்தல்

**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*



தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

சென்ற தடவையில் அமினோ அமிலங்கள் எவ்விதம் உருவாகின என்பதனைப் பார்த்து தொடர்ச்சியாக அதிலிருந்து உயிரினங்களின் அடிப்படையான கலம் வந்தது பற்றியும் பார்த்தோம். அந்நியர்கள் பற்றிய ஆய்வினை தொடர்வதற்கு, புவியில் உயிரினத் தோற்றம் பற்றி விஞ்ஞானம் தரும் தகவல்களை இன்னமும் பார்ப்போம். அமினோ அமிலங்களில் இருந்து கலங்கள் தோன்றுவது என்பது இயற்கையின் அழகிய தொழிற்பாடாகும். உலர்ந்த அமினோ அமிலக் கலவை வெப்பமாகையில் நீண்ட தொடர் சங்கிலியை அமைத்துக் கொள்ளும். எவ்விதமெனில், வெப்பமாகையில் அமினோ அமிலங்களின் இணைப்பில் இருந்து நீர் வெளியேறி அவற்றினை ஒன்றாக இணைத்துவிடும். பின்னர் அது நீரினுள் புகும்போது, அந்த மூலக்கூறு ஒன்றுதிரண்டு கோள வடிவினதாக மாறும். அத்துடன், தன்னைச் சுற்றியொரு மெல்லிய வெதுவெதுப்பான தோலை ஆக்கி, தன்னையொரு நுண்கோளம் போல ஆக்கிக் கொள்ளும். இப்போது தோன்றிய நுண்கோளமானது ஒரு கலத்தினைப் போலச் செயற்படும் வல்லமை கொண்டதாக மாறுகின்றது. இந்த மெல்லிய கோளச் சுவரின் ஊடாக, தனக்குத் தேவையானவற்றைச் சூழலில் இருந்து பெற்று, தன்னை வளர்த்து தன்னைப் பெருக்கிக் கொள்ளும் தன்மையையும் கொண்டுவிடுகிறது.

இன்னொரு கருத்தினையும் விஞ்ஞானிகள் கொண்டுள்ளார்கள். தன்னைப் போன்ற ஒன்றினை உண்டாக்கும் வல்லமை கொண்ட புரத மூலக்கூறு ஒன்று தனித்து விடப்படுகையில், தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, தனது புரதத்தினாலேயே தன்னைச் சுற்றியொரு பாதுகாப்புத் தோலினை உண்டாக்கிக் கொள்ளும். இதுவொரு உயிரியல் பரிணாம மாற்றத்திற்கான விளைவாக இருக்கும். அதனால் அங்கே உயிரியற் கலம் ஒன்று தோன்றி விடுகின்றது. இவ்விளக்கங்களின் வழியிற் பார்த்தால், நான் முன்னர் கூறிய எடுகோளான சக்திசடத்தின் இடைநிலைதான் உயிர் என்பதாக கருத முடியாது போய்விடுகிறது. அல்லாமலும் உயிர் என்பது காபன் தொடரைக் கொண்ட நீண்ட சங்கிலி அமைப்பில் நிகழ்கின்ற இரசாயன விளைவுகளின் தொகுப்பு எனத்தான் கருத முடிகிறது. பொருத்தமான இரசாயன மாற்றங்களைக் கொடுக்க முடியாது போகையிலே, உயிர் இல்லாது போக, அந்த உயிரினம் இறந்து போகிறது எனக் கருத முடிகிறது.



முதலில் ஒருகல உயிரனங்கள்தான் தோன்றின. அந்த உயிரினங்கள் கடலிற்றான் தோன்றியிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அமினோ அமிலங்களின் ஓட்டமும் புரதச் சங்கிலியும் கடலின் மேற்பரப்பிற்றான் நடந்தன. இரசாயனத் தாக்கங்களின் விளைவாகத் தங்களைப் பிரதி பண்ணக் கூடிய வல்லமையான ஒருகல உயிரினங்கள் அமினோ அமிலங்கள் தோன்றிய உடனே நடத்து விடவில்லை. கிட்டத்தட்ட 3000 மில்லியன் ஆண்டு காலம் அமினோ அமில, புரதச் சங்கிலிகளின் பரிணாம மாற்றங்கள் நடந்து, ஈற்றிலேதான் ஒருகல உயிரினங்கள் புவியிலே, அதுவும் கடலிலே சஞ்சரிக்கத் தொடங்கின. இவ்வொரு கல உயிரினங்களில் இருந்து மற்ற உயிரினங்கள் தோன்றத் தொடங்கின. சுமாராக 600 மில்லியன் வருடங்களின் முன்னர்தான் புவியில் உயிரினங்கள் தோன்றின என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இருப்பினும், பற்றீரியா, அல்காக்கள் போன்ற நுண்ணுயிரிகள் 3500 மில்லியன் ஆண்டுகள் முன்னரே கடல்களில் இருந்ததற்கான சுவடுகள் உள்ளதென ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஆனாலும் மனித இனத்தின் தோற்றம் ஒரு மில்லியன் வருடங்களுக்கு உள்ளாகவே தான் என்கின்றார்கள். கடலிலேதான் முதலில் உயிரினங்கள் தோன்றின. பற்றீரியாக்கள், அல்காக்களின் பரிணாம வளர்ச்சியின் வழியிலேயே இது நிகழ்ந்தது எனக் கூறுவதை எங்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது எனப் பல விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். கடலில் இருந்துதான் புவியின் தரைப்பகுதிக்கு உயிரிங்கள் காலப் போக்கில் வந்தன. புவியின் தரைப்பகுதிக்கு உயிரினங்கள் கடலில் இருந்து மெதுமெதுவாக வெளியேறி வந்து ஏறக்குறைய 300 மில்லியன் ஆண்டுதான் ஆகிறது என ஆய்வுகள் கூறுகின்றன. அதன் பின்னரே புத்திசீவிகள் எனும் ஆரம்ப மனிதஇனம் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியில் மெதுமெதுவாக வந்து சேர்ந்தது. கடந்த 1 மில்லியன் வருடங்களுக்குள்தான் மனிதவினத்தின் ஆரம்பம் பூமியில் தோன்றி இருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களது கருத்து. ஆயினும் 10,000 வருடங்களுக்கான மனிதனின் சுவடுகள் மாத்திரமே பூமியில் கருதக் கூடிய அளவில் காணக்கூடியதாக உள்ளது.

புவியிலே தோன்றிய உயிரினங்கள் எல்லாம், இன்று போலவே, ஒன்றில் ஒன்று தங்கியிருந்ததுடன் இயற்கையிலும் தங்கியிருந்தன. உயிரினங்களின் மாற்றங்கள் கூட இயற்கையின் தெரிவாகவே இருந்திருக்கின்றது. புவியின் காலநிலை மாற்றங்களை தகிக்க முடியாது அழிந்த உயினங்கள் போக புதுக் கால நிலைகளுக்கு ஏற்ப, தம்மைப் பரிணாம மாற்றத்திற்கு உள்ளாக்கித் தப்பித்தவை புது வடிவில் வாழத்தொடங்கின. ஒவ்வொரு இனத்தினதும் இனவிருத்தியும் ஆயிரமாயிரம் தலைமுறைகளாக பரிணாம வளர்ச்சிக்கு உள்ளாக புவியின் காலநிலை மாற்றங்களுடன் ஒத்து வாழக்கூடிய இனங்கள் பூமியில் தோன்றின. ஆக, ஆய்வுகளின்படி பார்க்கையில், 4600 மில்லியன் வருடங்களின் முன் தோன்றிய எமது பூமியில் 3900 மில்லியன் வருடங்களின் பின்னரே உயிரினங்கள் தோன்றின. அதாவது ஒருகல உயிரினங்களின் தோன்றலில் இருந்து, புவியில் உயிரினங்களின் காலம் ஆக 600 மில்லியன் வருடங்கள்தான். அவ்வுயிரினங்கள் கடலிலேயே தங்களைத் தக்க வைத்துக் கொண்டன. அங்கு அவை உயிரியற் பரிணாம மாற்றங்களுக்கு உள்ளாகி, கடலிலேயே தாவரங்களையும், ஈற்றில் மீனினங்களும் தோன்றின. வேற்றுக் கிரக மனிதர்கள் பற்றிய ஆய்வினை தொடர்வதற்கு முன்னராக அந்நியர்கள் பற்றிய இன்னொரு பதிவினைப் பார்ப்போம்.

## பச்சை மனிதர்கள்

டிசெம்பர் 06, 1978.

இடம் இத்தாலியின் Genoa,

பூந்தோட்டம் ஒன்றின் இரவுக் காவலரா போட்ருநாரோ சான்பிராட்ரா என்பவர் தனது கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். குறிப்பிட்ட நாளில்

விபரம் : சுமாராக 3 மீற்றர் உயரமான, மனிதரை ஒத்த உயிரினங்கள். பச்சை நிற அடர்த்தியான ரோமங்களை உடல் முழுவதும் கொண்டிருந்தன. இரண்டு பெரிய கண்களையும் அவற்றின் மேல் இரண்டுக்கும் நடுவிலாக மிகச் சிறிய இன்னொரு கண்ணையும் கொண்ட அவ்வுயிரினங்களின் காதுகள் தலையின் இருபுறமும் உயர்ந்து கூராகக் காணப்பட்டன. பூந்தோட்டம் ஒன்றின் இரவுக் காவலரான சான்பிராட்ரா ஒருநாள் கடமையில் ஈடுபடுக் கொண்டு இருந்த வேளையில் தன்னை நோக்கி வித்தியாசமான நான்கு வெளிச்சங்கள் வருவதைக் கண்டார். உதவிக்காக முயற்சி செய்தபோது அவரது வானொலிகள் செயற்படவில்லை. தொடர்ந்து வந்த நாட்களில் தீராத தலைவலியினால் அவர் அவதியுற்றார். சில வாரங்களின் பின் மனோதத்துவச் சிகிச்சைக்கு உட்படுத்தியபோது அன்று நிகழ்ந்தவற்றை நினைவிற்குக் கொண்டுவந்தார். அன்று அவரைப் பூந்தோட்டத்தில் பச்சை நிற மனிதர்கள் சிலர் சந்தித்து இருந்தார்கள். அவர்கள் பலவந்தமாக சான்பிராட்ராவை தங்களது விண்கலத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அங்கு மிகவும் சூடான, வட்ட வடிவில் அமைந்த அறை ஒன்றினுள் சான்பிராட்ராவை இருத்தி மிகவும் கடுமையான வலியைத்தரும் பரிசோதனைகளை செய்த பின்னர் சான்பிராட்ராவை பூந்தோட்டத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டார்களாம். இச்சம்பவம் வேற்றுக்கிரக மனிதர்களையும், அவர்களது வாகனம் பற்றியும் ஆய்வுகள் செய்பவர்களால் பதிவு செய்யப்பட்டிருந்தது.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**Venus Computers (Computer Sales & Services)**
• Computer & Laptop Sales • Software & Antivirus • Virus Removal
• All types of Computer Repairs • Computer Upgrades
We Also Sale Mobile Phones

Ganesh: 416.527.1455
venuscomputer50@gmail.com
umaaganesh@yahoo.com
For Computer Repairs, Upgrading & Virus Removal

# கனடிய தமிழரிற்கு ஓர் இணைப்பு பாலம் கனடிய தமிழர் பேரவை

## கனடிய தகவல் தொடர் 229

### CANADIAN TAMIL CONGRESS

கனடிய தமிழர்களுக்கு என ஆற்றல்கள், திறமைகள் மிக்க ஒரு பிரதிநிதித்துவம் வேண்டும். அந்த பிரதிநிதித்துவம் கனடிய தமிழர்களுக்காக மட்டுமல்ல ஈழ மண்ணில் துயருறும் தமிழர்களுக்காகவும் உலகமெங்கும் ஒலிக்க வேண்டும் என்ற கனடா வாழ் தமிழர்கள் பலரின் ஆதங்கத்திற்கு ஒரு தீர்வாக ரொறொன்ரோவில் தலைமை யகத்தைக் கொண்டு செயல்படும் ஒரு இலாபகரமற்ற நிறுவனமே 'கனடிய தமிழர் பேரவை' (Canadian Tamil Congress). இது கனடிய அரசினால் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சபையாக பல இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும்.

கனடிய தமிழர் பேரவையின் நோக்கங்கள், செயல்பாடுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. கனடிய தமிழ் மக்களின் விடயங்களில் கனடிய மத்திய, மாகாண, நகர சபை அரசுகளுக்கு தமிழரின் பிரதிநிதியாக சென்று தீர்வுகள் காண வேண்டிய விடயங்களில் சரியான, சட்டபூர்வமான தீர்வுகளை காண்பது.

(உதாரணமாக கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் ஈழத்தமிழ் மக்கள் இருமுறை கப்பலில் அகதியாக வந்து இறங்கியபோது கனடிய தமிழர் பேரவையின் சட்டதுறை நிபுணர்கள் துரித கதியில் அங்கு சமூகமளித்திருந்தனர். கனடிய மத்திய குடிவரவு அமைச்சு, ஆர்.சி.எம்.பி எல்லை பாதுகாப்பு பிரிவினர் உட்பட சகல அரச நிறுவனங்களுக்கும் கனடிய தமிழர் பேரவை யினையே இந்த விடயத்தில் ஈழத்தமிழ் அகதிகளின் பிரதிநியாக அந்த நேரம் ஏற்று கொண்டிருந்தனர்.)

2. கனடாவின் மனித உரிமைகள், பல்கலா-சாரம், மத சுதந்திரம், பன்முகப்படுத்தப்பட்ட ஆண், பெண் சமநிலைமை யாவற்றினையும் கனடிய தமிழர்கள் வாழ்வில் பேணி பாதுகாத்தல்.

(சுமார் 27 வருடங்களுக்கு முன்பு ரொறொன்ரோவில் விக்ரோரியாபார்க் வீதியில் உள்ள தொடர்மாடி கட்டிடத்தில் ஈழத்தமிழர்களுக்கு எந்த சந்தர்ப்பத்திலும் வாடகைக்கு குடியிருப்பு மனை வழங்கப்பட மாட்டாது என்பது நேரடியாக குறிப்படுகிறது என்ற ஒரு செய்தி வெளியாகியது. இதே போல் வீதிகளில் தமிழ் இளைஞர் களிடையே நடைபெறும் துப்பாக்கிச் சண்டைகளில் 'ஈழத்தமிழர்' என்ற அடை யாளத்தினை ஊடகங்களும், பொலீசாரும் பல இடங்களில் பகிரங்கப்படுத்தினர்.)

இப்படியான மனித உரிமைகள் மீறல்கள் இனிமேல்காலத்தில் நடந்தால் தமிழர்களுக் காக குரல்கொடுக்க கனடிய தமிழர் பேரவை என்றும் பின் நிற்காது. 'கனடிய தமிழர் பேரவை' என்ற உறுதியான அமைப்பு தற்போது இருப்பதால் கனடா தமிழர்கள் நிம்மதியாக வாழலாம்.

3. கனடாவில் மத்திய, மாகாண, நகரசபை அரசுகளுடன் சேர்ந்து தமிழர்களின் பங்களிப்பினை ஊக்குவித்தல்.

இதற்கு உதாரணமாக பின்வரும் விடயங்களில் கனடிய தமிழர் பேரவையின் ஈடுபாட்டினை குறிப்பிடலாம்.

A. ஸ்காபரோவில் நடைபவனி ஒன்றினை ஒழுங்கு செய்து, ஒரு பாரிய நிதி சேகரிப்பினை சிலமணி நேரங்களில் நடத்தி சுமார் $50,000 டொலர் பணத்தினை கனடிய தமிழர் பேரவை 'Canadian Heart & Stroke Foundation' க்கு வழங்கியது.

B. தேர்தல் காலங்களில் தலைமை வேட்பாளர்களின் விவாதங்களை தமிழ் மக்களுக்காக பிரத்தியேகமாக ஒழுங்கு செய்து, தமிழ் ஊடகங்களில் பிரச்சாரம் செய்ததுடன், வாக்குகள் வழங்குவதில் கனடிய தமிழர்களின் கூட்டான வலிமை யினை கனடிய அரசியலில் காட்டியது.

C. தரமான தமிழர்களை கனடிய அரசியலில் பிரதிநிதியாக தெரிவு செய்ய பூரண ஆதரவுகளை வழங்குவது.

4. தமிழ் மொழி, தமிழர் கலாசாரங்கள் பற்றி ஆய்வு செய்து, பல கலாசார நிகழ்வு களை கனடிய அரசின் பிரதிநிதிகளையும் சேர்த்து நடத்தி, கனடிய மண்ணில் தமிழர் களின் பாரம்பரியத்தினை நிலைநாட்டல்.

உதாரணமாக தை மாதத்தினை தமிழர் மரபு நாளாக மாகாண அரசு பிரகடனம் செய்யும் அளவுக்கு கனடாவில் செயல்பட்ட தமிழர் அமைப்புகளுடன் ஒன்றிணைந்து செயல்பட்டதுடன் வருடம் வருடம் தைப்பொங்கல், தமிழர் மரபு நாள் கொண்டாட்டங்கள் என்பனவற்றினை மிக பிரபல்யமாக ஒழுங்கு செய்து சிறப்பாக நடத்தி வருவதனை குறிப்பிடலாம்.

இவ்வருடம் நடந்த நிகழ்வில் மாகாண முதல்வரும் அவரது எம்பிக்கள் குழுவினரும் பங்குபற்றியிருந்தனர். இந்த விழாக்களில் தமிழர்களின் மரபுகள், கலைகள், கலா-சாரங்கள் யாவும் இயல், இசை, நாடக வடிவில் நடந்ததை கனடிய அரசியல் வாதிகள் மற்றும் ஆங்கில ஊடகங்களின் பிரநிதிகள் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர்.

5. ஈழம் உட்பட சர்வசேதம் எங்கும் வாழும் தமிழ் மக்களின் துன்பவியல் நிகழ்வுகளை நிறுத்துவதற்கு கனடாவிலும் சர்வதேச ரீதியிலும் உள்ள அமைப்புகளுடன் ஒத்துழைத்தல்.

உதாரணமாக பின்வரும் சில நிகழ்வுகளை இங்கு குறிப்பிடலாம்.

A. ஈழத்தில் ஸ்ரீலங்கா அரசின் போர்க் குற்றங்களை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை நிறுவனம், மற்றும் சர்வதேச மன்னிப்பு சபை உட்பட சர்வதேச நிறுவனங்களுக்கு எடுத்துச் சென்றமை.

B. கனடாவின் அரசியல் மட்டங்களுக்கும் ஆங்கில ஊடகங்களுக்கும் ஈழத்தமிழர் களின் துயரங்களை எடுத்துச்சென்று பல தொலைக்காட்சி விவாதங்களில் பங்கு பற்றியது.

6. கனடாவில் உள்ள இளைய தலைமுறை யினருக்கு தலைமைத்துவ திறமைகளை வளர்க்கும் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருதல்.

கனடிய தமிழர் பேரவையின் பேச்சாளர் திரு. டேவிட் பூபாலபிள்ளை அவர்கள் தங்கள் நிறுவனத்தின் செயல்பாடுகள் பற்றி குறிப்பிடும்போது, கனடாவின் ஆங்கில, பிரெஞ்சு ஊடகங்களின் நிர்வாகத்துறை மற்றும் அரசாங்க மேல் மட்டங்களில் உள்ளவர்களை தமிழர்களின் பிரதிநிதியாக தாம் தொடர்பு கொள்ளும்போது அதனை அவர்கள் அங்கீகரித்து நடந்து கொண்ட தனை தெரிவித்திருந்தார். கனடாவில் மட்டுமல்ல பல சந்தர்ப்பங்களில் அமெரிக்காவின் அரசாங்க நிர்வாகத்தோ டும் நிறுவனத்தின் சார்பில் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருந்தது என மேலும் தெரிவித்திருந்தார்.

கனடிய தமிழர் பேரவை கனடா வாழ் தமிழ் மக்கள் சகலரும் பேரவையில் அங்கத்தவர்களாக சேர்ந்து கொண்டு அந்த நிறுவனத்தினூடாக கிடைக்கும் பயன்பாடுக-ளை பெற்று தமிழ் தேசியம் என்ற ரீதியில் இணையுமாறு அன்பு கரம் நீட்டி அழைக்கின்றது.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


Sale Of Business With Property
Fast Food / Take Out



MARKHAM & NASHDENE RD.
Excellent opportunity to own your business. Catering & Fast food Restaurant. Cater to all kinds of evens & size. Lots of parking, Convenient location, with great access to Highways & Major Routes with front View.
Asking Price $324,900



Rajkumar Rasiah
(Sales Representative)
HomeLife / Future Realty Inc. Brokerage•
Cell: 416.707.1674
Office: 905.201.9977
•Independently Owned & Operared

# நோயற்ற...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

வேண்டும். நெய், வெண்ணெய் தக்காளி, கொய்யா, பசளிக்கீரை, முட்டைக் கோவா இளம்கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி அதன் எலும்புவகை போன்ற வற்றை தவிர்த்தும் கொள்வது நன்றாகும். வாழைத்தண்டுச்சாறு, அதன்பொரியல் வேண்டும். நாம் அணியும் ஆண் & பெண் உள் ஆடைகளை நன்கு சுத்தம் செய்து கொள்ளவேண்டும். நாம் விரல் நகங்களையும் வளரவிடாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நகங்களுக்கு இடையில் அழுக்குடன் கிருமிகள் குடிகொள்ளும். எல்லோரும் கால் அணிகளை தவறாது பாவித்து வருதல் வேண்டும். சுத்தமாக இருந்தால் நாம் தொற்றுக்கு ஆளாவது கடினம் என்பதை அறிவீர்கள்.



என்பனவற்றை பாவித்து வருவதினால் சிறுநீரக கற்கள் அற்றுப்போகும். வேலை செய்யும் இடங்களில் வெப்பம் கூடிய பகுதியில் நீண்ட நேரம் அல்லது பலநாட்கள் வேலை செய்தால் அல்லது கோடை காலத்தில் வெப்ப நாடுகளுக்குச் சென்று சுற்றாடிய பின் வந்தால் நன்று. இக்காலத்தில் வேண்டிய நீர் ஆகாரங்களை பாவித்தல் வேண்டும். தண்ணீர் குடிப்பது மிக நன்றாகும்.

மேலும் ஒரு குடும்பத்தில் யாருக்காவது வயிற்றுவலி, ஆசன அரிப்பு, பசியின்மை, இரத்த சோகை காணப்படின் உரியவருக்கு குடலில் பூச்சி ஏற்பட்டிருக்கலாம். இப்படிப் பட்ட பூச்சி எமது இரத்தை உறுஞ்சும் தன்மையுடையது. அத்துடன் குடல் அடைப்புக்களையும் ஏற்படுத்தும். இப்படியான புழுக்கள் நாம் பாவிக்கும் உணவுவகை, தண்ணீர், சுவாசிக்கும் காற்று மூலம் செல்லுகின்றது.

ஆனால் கொக்கிப்புழு நமது கால்வழியால் உள்செல்லுகின்றது. எனவே இப்புழுக்கள் எம்மைத் தீண்டாமல் இருப்பதற்கு சுத்தம் சுகம் தரும். அதாவது நாம் உணவை உண்டபின், மலம் கழித்த பின் நன்கு நமது கைகளை சுத்தம் செய்து கொள்ள மூலநோய் (piles). இதனை பௌந்திரம் எனவும் அழைப்பதுண்டு. இதில் உள், வெளி என 2 வகையுண்டு. மலவாசலில் தசை வெளித்தள்ளியிருப்பதை வெளிமூலம் (prolapse of the rectum) எனக் கூறலாம். இதற்கு அறுவை சிகிச்சையே செய்வதுண்டு. இந்நிலைகள் ஏற்படாதிருக்க உணவில் பழவர்க்கம், பச்சைக்காய்கறி வகை, கீரைவகை என்பவற்றை நன்கு தண்ணீரில் சுத்தம் செய்து பாவித்து வருதல் வேண்டும். தண்ணீர் வேண்டியளவு பருகுதல் வேண்டும். இதனால் மலம் கழிப்பதற்கு இலகுவாக இருக்கும். அத்துடன் முழுத்தானிய வர்க்கம், பருப்புவகை போன்றவற்றை சுத்தப்படுத்திப் பாவித்து வருதல் சாலச்சிறந்தது. மேலும் உடற்பயிற்சி செய்து கொள்வது உத்தமமாகும். உ+ம் மூச்சை நன்கு உள் இழுத்து, வயிற்றையும், ஆசனவாயையும் உள்ளே இழுத்து விடுதல் சாலச்சிறந்தது. மேலும் மலம் கழிக்கச் செல்லும் போது எக்காரணம் கொண்டு முக்கக்கூடாது. மலம் கழிக்கும் நிலை ஏற்பட்டால் மாத்திரம் மலம் கழிக்கச் செல்ல வேண்டும். உணவில் காரமான, எண்ணெய் பசையுள்ளவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும். - தொடரும்

# ப்ளேஷ்பேக்...

கூறிவிடுவார்.

அந்தோனி நல்லவனாகத் திருந்தி வாழும்போது பக்கவாதம் வந்து படுத்த படுக்கையாகிறார். நள்ளிரவில் வேலையாள் யாரும் இல்லாதபோது கொடுமையான இருமலில் துன்புறுவார். நோய்க் குரல் பொறுக்க முடியாத பாகிருதி தன் அறையிலிருந்து வெளிப்பட்டு, அவரது தலையைத் தூக்கி மருந்து கொடுத்து பணிவிடை செய்வார். "பாவம் செய்தபோது தண்டிக்காத கடவுள், திருந்தி மனிதனாக மாறியபோது தண்டிக்கிறானே..." என்று அழுவார், பாகிருதி. அப்போது அந்தோனி, கண்ணீருடன் "அன்று உன் கணவனோடு தனித்திருக்கையில் ஒரு பாடலைப் பாடினாயே... அப்பாடலை எனக்காகப் பாடு" என்று கேட்பார். காமத்தால் நெகிழ்ந்த மனநிலையில் தன் தலைவனிடம் பாடும் அந்தப் பாடலை, பாகிருதி அழுகையோடு பாடுவார். பாடல் முடிந்ததும் அந்தோனியின் உயிர் போய்விடும்.

அதன்பிறகு, குருக்கள் திரும்பி வந்து பாகிருதியை தன்னோடு சேர்ந்து வாழ அழைப்பார். அப்போது பாகிருதி அதற்கு மறுத்துவிடுவார். "என் தரப்பை ஏற்காமல், துன்பத்தில் உடனில்லாமல், ஓடிய உன்னோடு வாழ்வதைவிட, அந்தோனியின் விதவையாக வாழ்ந்துவிட்டுப் போகிறேன்" என்பது அவர் முடிவு.

அந்தோனியாக ராஜேஷும் பாகிருதியாக லட்சுமியும் குருக்களாக பிரசன்னாவும் நடித்திருக்கிறார்கள். மேலும் பாண்டியன், எஸ்.எஸ். சந்திரன், ஐசரி வேலன் ஆகியோரும் இப்படத்தில் நடித்திருக்கிறார்கள்.

இயக்கம்: ஆர்.சி. சக்தி. ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜயகாந்த் போன்ற முன்னணி நட்சத்திரங்களை இயக்கியவர்



மொத்தம் 27 படங்கள் எடுத்திருக்கிறார். ஆனால், ஆர்.சி. சக்தி என்றதும் இன்று ஒருவருக்கு இதெல்லாம் ஞாபகம் வருவதில்லை. "சிறை" இயக்குநர்தானே" என்பதுதான் உடனே அனைவரது பதிலாகவும் இருக்கிறது. மகேந்திரனின் 'உதிரிப்பூக்கள்' போல், பாரதிராஜாவின் '16 வயதினிலே' போல் தமிழ் சினிமாவில் 'சிறை' ஒரு மைல் கல்.

யூடியுப்பில் 'சிறை' இருக்கிறது. பார்க்க வேண்டிய தமிழ் சினிமா.

# இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனவின் இந்திய பயணத்தின் போது இரண்டு கோடி ரூபா சேமிப்பு!

இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனவின் இந்திய பயணத்தின் போது சுமார் இரண்டு கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளது. இலங்கை அதிபராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொண்ட முதலாவது பயணத்தின் போது இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன தேவையற்ற செலவுகளை வரையறுத்திருந்தார். கடந்த 15 ஆம் திகதி முதல் இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன மூன்று நாட்கள் இந்திய பயணமொன்றை மேற்கொண்டிருந்தார். இதற்கான மொத்தச் செலவு 57 இலட்ச ரூபா என தெரிவிக்கப்படுகிறது. முன்னாள் இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஸவின் இந்திய பயணத்தின் போது சுமார் இரண்டு கோடியே அறுபது இலட்ச ரூபா செலவ-டப்பட்டுள்ளது. இதன்படி மைத்திரிபால சிறிசேன இந்திய பயணத்தின் போது சுமார் இரண்டு கோடியே மூன்று இலட்ச ரூபா செலவுகளை சேமித்துள்ளார். இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன சாதாரண பயணிகள் விமானத்தில் பயணத்தை மேற்கொண்டதுடன், அப்போதைய இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ச பயணங்களுக்காக பிரத்தியேக விமானங்களை பயன்படுத்தியிருந்தார். இவ்வாறு இந்தியாவ-ிற்கு தனியாக விமானத்தைப் பயன்படுத்தி பயணம் செய்வதற்காக மட்டும் ஒரு கோடியே பதினாறு இலட்ச ரூபா செலவாகியுள்ளது என இலங்கை அதிபர் செயலகம் தெரிவித்துள்ளது.

**COMMERCIAL UNITS FOR SALE**

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**Pl. call: 416.315.9397**

REFINANCE TO LOWER RATES
& SAVE 75%

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000@2.9% | 1,498.02 | - |
| Car Loan | 21,000@7.5% | 764.25 | 0.00 |
| Line Of Credit | 16,000 @6.5% | 566.67 | 0.00 |
| Line Of Credit2 | 12,500 @7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @24% | 150.00 | 0.00 |
| | | | |
| New Mortgage Payment | 386,500@2.5% | | 1,524.55 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,014.20** | **1,524.55** |

MONTHLY SAVING
$2,489.65

VERICO MORTGAGE BROKERS NETWORK

APPLY ONLINE kiruba.ca OR Call Me

ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
Lic# 11995
305-5200 Finch Ave East
Scarborough, ON. M1S 4Z5

KIRUBA
THANABALASINGHAM
Mortgage Agent
Lic# M12002440

416.298.2777
info@kiruba.ca


# ப்ளேஷ்பேக் திரை விமர்சனம் - சிறை

மனதால்கூடத் தவறிழைக்காத ஒரு பெண், எதிர்பாராத சூழ்நிலையில் ஒரு கயவனால் பாலியல் பலாத்காரம் செய்யப்படுகிறாள். அதை ஜீரணிக்கமுடியாத கணவன், அவளுடன் வாழ்க்கை நடத்த விரும்பாமல் ஓடிவிடுகிறான். இதனால் அப்பெண், தன் தாலியைக் கழட்டி எறிந்து, தன்னையே சிறை வைத்து, தனியாக வாழ்ந்து காட்டுவது தான் சிறையின் சுருக்கமான கதை. இன்று இக்கதையைக் கேட்கும் நாம், அப்படியா என சுலபமாக இதனைக் கடந்து சென்றுவிடுவோம். ஆனால், 1980களில்… புரட்சிகரமான கருத்து என்று இப்படத்தைப் பாராட்டுபவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். என்றாலும், தமிழ்ப் பண்பாட்டுக்கு முரணான கதை என்று இப்படம் எதிர்கொண்ட சர்ச்சைகள் இன்று நாம் கற்பனை செய்ய முடியாதவை.

விரிவாக பார்ப்போம்…

அந்தோனி அந்த கிராமத்தின் பெரிய பணக்காரர். குடி, பெண் என்று தனிக்கட்டையாய்த் தம் மூதாதையர் சேர்த்துவைத்த சொத்தை கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக்கொண்டிருப்பவர். அந்த ஊருக்கு கோயில் பணிக்காக குடிவரும் குருக்களின் இளம் மனைவி பாகிருதி. "நான் பூஜை பண்ணினது வீண்போகல நீ எனக்கு மனைவ-ியா வந்தது என் பாக்கியம்" என்னும் அளவுக்கு, பாகிருதியின் அழகிலும் அன்பிலும் அடக்கத்திலும் மகிழ்ந்து எப்போதும் அவர் புகழ் பாடிக்கொண்டேயிருப்பார், குருக்கள். பாகிருதியைப் பார்க்கும் அந்தோனி அவர் அழகில் மயங்குகிறார். கணவனும் மனைவியும் இரவில் பேசுவதை ஒட்டுக்கேட்கும் அந்தோனி, கணவனின் இடத்தில் தன்னைக் கற்பனை செய்து அமைதியிழக்கிறார். மறுநாளே குடித்துவிட்டு, குருக்கள் இல்லாத நேரத்தில் வீட்டுக்குள் புகுந்து, பாகிருதியின் கெஞ்சலைப்



- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

பொருட்படுத்தால் தம் ஆசையைத் தீர்த்துக்கொள்கிறார். எல்லாம் முடிந்து அந்தோனி கதவைத் திறந்து வெளியே வரும் போது குருக்கள் வந்துவிடுவார். ஊரிலேயே பெரிய மனிதர் அப்பாவி குருக்களால் என்ன செய்ய முடியும்?

கலைந்த கோலத்தில் வெளியே வரும் பாகிருதி, தன் கணவனைக் கண்டு அழுது அரற்றுவார். "என் மீது தவறில்லை. நான் நிரபராதி" என்று கெஞ்சுவார். ஆனால் குருக்களோ அதனை ஏற்றுக்கொள்ளாமல், "இனி நாம் சேர்ந்து வாழ முடியாது... போ" என்று சொல்லிவிட்டு, பாகிருதியை அப்படியே விட்டுவிட்டு, ஊரைவிட்டே சென்றுவிடுகிறார். கணவனைத் தேடியலையும் பாகிருதி, ஒரு கட்டத்தில் சாக முடிவெடுக்கிறார். அப்போது அவரைத் தடுக்கும் ஒரு கிறித்துவர், "நீ எதிர்த்துப் போராடு" என்று அறிவுரை கூறி, "உன்னை இந்நிலைக்கு ஆளாக்கிய அந்தோனியிடமே சென்று நியாயம் கேள்" என்கிறார்.

பாகிருதி, துணிமணி மூட்டை முடிச்சுகளுடன் அந்தோனி வீட்டுக்குள் குடியேறுகிறார். இதைப்பார்த்து அந்தோனி திகைத்து விழிக்க, "நான் இனி இங்கேதான் இருப்பேன். இந்த அறைக்குள் என்னைச் சிறை வைத்துக்கொள்வேன். வேளாங்கண்ணி மாதா மீது ஆணை. இந்தப் படி தாண்டி நீ வரக்கூடாது. வந்தால்… அன்று என் அழகைத்தானே பார்த்தாய்? அழகான பிணத்தையும் பார்ப்பாய்..." என்று கூறிவிடுவார். கொஞ்சம் கொஞ்சமாக அந்தோனி, தான் செய்த தவறை உணர்வார். குடியை கைவிடுவார். அந்தோனியின் வேலைக்காரனான பாண்டியனின் காதல் வெளிப்பட்டு விவகாரமாகும்போது, இருபத்தைந்து ஏக்கர் நிலத்தை எழுதிவைத்து திருமணத்தை முடித்துவைப்பார். ஒருநாள் பாகிருதியிடம், "ஏம்மா... நீ எப்பம்மா போவே?" என்று கேட்பார். அப்போது பாகிருதி பேசும் பத்து நிமிட வசனத்திற்குப் பிறகு அதையும் கேட்கமாட்டார். பாகிருதியின் மூன்று தங்கைகளின் கல்யாணத்திற்குப் பணம் கொடுத்து உதவுவார். குத்தகைப் பணம் கொண்டு வந்தால், "அதை அந்த அம்மாகிட்ட கொடுத்துடுங்க" என்று

தொடர்ச்சி 18ஆம் பக்கம்



Parkway Mall Mobilicity !!!
$50 OFF COUPON
$20/mo
Life Time Deal
UNLIMITED Talk, Text & DATA(+$10)
UNLIMITED Local Calling
UNLIMITED Ontario Long Distance
UNLIMITED Text messaging
UNLIMITED DATA, Internet, Mobile-Hotspot Canada & US Long Distance Calling (+$10)
FREE Caller ID, Voice Mail, Call Waiting and more
Samsung T199 $99.99 $0
Alcatel Evolve 2 $199.99 $69.99
Alcatel OneTouch Fierce 4G $299.99 $99.99
LG L70 $229.99 $129.99
Samsung Galaxy S4 $649.99 $309.99
iphone 5C 16GB $549.99 $349.99
No Contract !! No Credit Check !!
PHONES $50 OFF
You can bring in your own phone
ONLY at
Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ/English/Chinese)
M1R4B8, 416-999-9229
mobilicity
Now that's smart.™
Limited time offer and may only be available to new activations. Please ask for in-store offer. $50 coupon can be only applied on phones and already applied on above phones. Save $10/month on our $25 unlimited plan when combined with our $5 voicemail add-on while customer's account remains active with Mobilicity. Adding $10 for unlimited data, Canada and US long distance calling needs to sign up with automatic payment. Taxes are extra. Restrictions may apply on combining offers with other offers or promotions. All unlimited features included in each plan/add-on, including unlimited talk, text and data features, must originate and be used within the Mobilicity Unlimited Zones. Additional terms and conditions apply. Subject to change without notice. All rights reserved.

# AVANI - 2

# NEW PROJECT BY

TRIDEL
BUILT FOR LIFE

## KENNEDY & HWY 401



Tridel
Price Starting
From $215k

*Chance to Win to Cuba***
*All Inclusive Tickets*

**HomeLife / GTA Realty Inc., Brokerage***

**5215 Finch Ave, E., #203 Toronto, ON**

**Tel: 416.321.6969**

HOMELIFE
HIGHER STANDARDS

*** When a client buy a Condo. unit from Avani - 2 project through HomeLife GTA Realty Inc, Brokerage• Chance to win all inclusive Tickets to Cuba for one week. Limited to 2 couple (4 People) *Purchase must be on or before June 30, 2015*

**Independently Owned & Operated*

"Helping Families Make The Right Move"



#2909 - 50 Town Centre Crt., Toronto
1+1 Bedroom. 1 washroom.
600 - 699sq.ft
Asking Price $290,000



BUSINESS FOR SALE
Asking Pice $49,900



#1910 - 400 Mclevin Ave., Toronto
2 Bedroom. 2 washroom.
900 - 999sq.ft
Asking Price $180,000



9 Bellotti Cres., Ajax
4 Bedroom. 4 washroom.
2500 - 3000sq.ft
Asking Price $749,900

RE/MAX®
KAYAN KANESALINGAM
SALES REPRESENTATIVE
Cell: 416.858.9633
Off: 416.287.2222
*Independently Owned & Operated
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage
1265 Morningside Avenue, Suite 203, Toronto ON M1B 3V9 Canada



# பெண்கள் தினம்

புதுமைப் பெண்ணை காண்போம் என்று
புலவன் அன்று பாடியது கேட்டோம்
பிள்ளைகளைப் பெறும் இயந்திரமும் இல்லை
பின் தங்கி வாழும் நிலையிலும் இன்று அவள் இல்லை

எத்துறையில் நாம் நுழைந்தாலும் அத்துறைகளில்
எல்லாம் அவர்கள் பணிபுரிவது காண்போம்
நீதித் தேவதையும் பெண் ஆவாள்
நீர் பாச்சும் நதியும் பெண் ஆமே



கற்பின் பெருமையில் அவள் கண்ணாக
கறை ஏதும் பட்டிடா காத்திடுவாள்
வீரத்தின் சிறப்பால் சுடுகலன் தாங்கி
வீரக்காவியமும் படைத்திடுவாள்

குதூகல குடும்பமாய் தினம்
குடும்ப விளக்காய் விளங்கிடுவாள்
துணைவன் பெருமையை போற்றிடுவாள்
தூணாய் நின்று அவள் துன்பங்கள் தாங்கிடுவாள்

உலையில் உள்ளதை உள்ளவர்களுக்கு
உவந்து அவர்களுக்கு உணவு அளிப்பாள்
உள்ளதை மட்டும் தான் உண்டு
உள்ளதே போதுமென்றிருப்பாள்

பெண்ணின் பெருமைகளைப் போற்றிடுவோம்
பெண்மையையும் நாம் புரிந்திடுவோம்
பெண்கள் தினம் இன்று அவர்களை நாம்
பெருமையுடன் மதித்திடுவோம் - கவிநாதம் பரந்தாமன்

# மருத்துவ குறிப்பு!



**பாதாம் பருப்பு** - 7 பாதாம் பருப்பு, 2 தேக்கரண்டி கசகசா இரண்டையும் இரவு தண்ணீரில் ஊற வைக்கவும். காலையில் பாதாம் பருப்பின் தோலை எடுத்துவிட்டு மற்றவைகளை பசும்பால் விட்டு நன்றாக அரைத்து சர்க்கரை கலந்த ஒரு டம்ளர் பாலில் கலந்து காய்ச்சி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடவும். உடல் சோர்வு நீங்கும். ஆண்மை குறையுள்ளவர்களுக்கு விந்து பெருகும். உடல் நன்கு தேறும்.



வெந்தயக்கீரையை வெந்தயக்கீரையை அடிக்கடி சமைத்துச் சாப்பிடுவது நல்லது. உடலுக்கு பலத்தைக் கொடுக்கும். கண் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும். பார்வை தெளிவடையும். சொரி சிரங்கை அகற்றும். அஜீரணத்தைப் போக்கும்.



பேரீச்சம்பழத்தை 5 பேரீச்சம்பழத்தை கொட்டை நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கி காய்ச்சிய பசும்பாலில் சேர்த்துக் கலந்து, தேன் 2 ஸ்பூன், ஏலக்காய்- 3, குங்குமப்பு ூ- 5 இதழ் கூட்டிக் கலந்து பருகலாம். இதற்கு இணையான ஒரு ரொனிக் கிடையாது. சிறுவர், சிறுமியர் இளைஞர், தாய்மார்கள், நோயுற்றவர்கள், படுக்கையிலேயே கிடக்கும் நீண்டநாள் நோயாளிகள் என எல்லோருக்கும் கொடுக்கலாம். இது ஒரு சத்துள்ள நல்ல ரொனிக்.

செம்பருத்தி சர்பத் - 100 பூக்களுக்கு ஒரு படி சுத்த நீர் விட்டு, சரி பாதியாகும் வரை காய்ச்சி, ஒரு வீசை சீனாக்கற்கண்டு சேர்த்து சர்பத்தாக நன்றாகக் காய்ச்சி, காலை-மாலை அரை அவுன்ஸ் சிறுவர் முதல் பெரியோர் வரை பருகிவர, கணைச் சூடு உஷ்ணம் உடனே போகும். ஒரு மண்டலம் சாப்பிட சரீரம் பருத்துவிடும். மன உற்சாகம் தரும். சிறுவர் சிறுமியர் கவர்ச்சியான தோற்றம் பெறுவர்.



வெந்தயம்: வெந்தயமும், வறுத்த கோதுமையும் சமமாக எடுத்து பொடி செய்து (கோப்பிக்குப் பதிலாக) பாலும் சர்க்கரையும் சேர்த்துப் பருகி வர உடல் மேன்மையடையும்.

# மூலம் நீர்மூலமாக

## Piles

உலக மக்கள் தொகையில் 50 பேரில் ஒருவருக்கு மூலநோயின் தொந்தரவு உள்ளது. இருபது வயதிலிருந்து நாற்பது வயதுக்குட்பட்டவர்கள் மெல்ல மெல்ல மூல நோயாளிகளாக மாறி வருகிறார்கள். நாற்பது வயதை நெருங்கும்போது மூலம் சார்ந்த பல நோய்கள் வந்து பற்றிக்



கொள்கிறது.

### மூலநோயை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. பரம்பரையாக வருவது. இதனை உணவுகள், பயிற்சிகள் மூலம் கட்டுப் படுத்தலாமே தவிர பூரணமாக குணப்படுத்துவது கடினம்.

2. இடையில் வருவது. இதனை உணவுப்பழக்கம், வாழ்க்கை முறையை சற்று மாற்றியமைப்பதன் மூலம் இலகுவில் குணப்படுத்தலாம்.

மூலநோயானது நேரம் தவறி உண்ணுதல், ஒழுங்கற்ற உணவு அதாவது எந்நேரமும் ஏதாவது ஒன்றை மென்று கொண்டேயிருத்தல். எளிதில் சீரணமாகாத உணவு, போதிய உழைப்பின்மை, நீண்ட நேரமாக, வாகனங்கள் ஓட்டுதல் அல்லது அவற்றில் பயணம் செய்தல், ஓயாமல் உழைத்தல், வெய்யிலில் அலைந்து திரிந்து விட்டு குளிர்பானங்களை அருந்துதல், மது, புகைத்தல் வகைகளை அதிகமாக உபயோகித்தல், உணவில் அதிக காரம் சேர்த்துக் கொள்ளுதல், மலம் கழிக்கும் உணர்வு தோன்றிய போதும் அதனை நீண்டநேரம் அடக்கி வைத்தல். இதேபோல் சிறுநீரை அடக்கி வைத்தல், மலம் இலகுவாக வெளியில் வராமல் வெகு கடினமாக முக்கி மலத்தை வெளியேற்றுதல், அதிக உபவாசம் இருத்தல், அளவுக்கு அதிகமாக உணவு உண்ணுதல். அதிகம் மாமிசம் உண்ணுதல், அதிக மருந்து மாத்திரை களை உட்கொள்ளுதல், அளவுக்கதிகமாக

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

உடலுறவு கொள்ளுதல், அதிக வயது சென்றபின் கருத்தரித்து பிரசவிப்பதாலும், இரைப்பை சீர் கெடுதல் போன்ற பல காரணங்களால் மலக்குடலும் அது சார்ந்த பகுதிகளும் பாதிக்கப்படுவதால் மூலநோய் உருவாக முக்கிய காரணங்களாக அமைகின்றது.

### மூலநோய்க்கு இயற்கை மருத்துவம்



1. பசுப்பாலை நன்றாக குலுக்கிக் கலக்குவதால் உண்டாகும் நுரையை எடுத்து எலும்மிச்சம் பழச்சாறு கலந்து காலை, மாலை இருவேளை பருகி வந்தால் 7 நாட்களுக்குள் இரத்தப் போக்கு நின்றுவிடும்.

2. நீண்டநாள் இரத்த மூலத்திற்கு தயிரில் வெங்காயத்தை ஊறவைத்து தினமும் இருவேளை சாப்பிட்டால் நல்ல பலன் கிடைக்கும்.

3.வெங்காயச் சாறுடன் நெய், சர்க்கரை கலந்து பருகினால் விரைவில் குணமடையும்.

4 கொதிக்கும் நீரில் மாதுளம்பழ விதை சிலவற்றை போட்டு சிறிது நேரத்தில் இறக்கி அதை தேநீர்போல அருந்திவைர குணமாகும்.

5. மூலம் வலி நீங்க சிறிதளவு பாலில் வாழைப்பழம் சேர்த்து கடைந்து சாப்பிட்டு வர மூலவலி குணமாகும்.

6. பாகற்காய் இலையின் சாற்றை மோருடன் கலந்து காலை, மாலை பருகிவர நோய் நீங்கும்.

7. வலியுள்ள இடத்தில் முருங்கை இலையை அரைத்து பூசலாம்.

### யோகாவில் மூலநோய்க்கு இடமில்லை

யோகாசனங்கள், பிராணாயாமம், முத்திரைகள், பந்தங்கள் போன்றவை சில மூலநோய்க்கு முடிவான தீர்வாகும்.

1. மூலக்கனல் ஆசனம்
2. சர்வாங்காசனம்
3. சலபாசனம்
4. நவகாசனம்

இவற்றை தினமும் 10 நிமிடங்கள் செய்து வந்தால் மூலநோய், மூலரோகம் ஏற்பட வாய்ப்பில்லாது போவதோடு வந்த மூலமும் குணமாகும். இதனுடன் சில மூச்சுப்பயிற்சி முறையையும் செய்து வந்தால் மூலச்சூடு குறைந்து நோயின் தீவிரம் அடங்கும். இவற்றையும் கடந்து உள் மூலம், வெளி மூலம், இரத்த மூலம், சீழ் மூலம் என சகலவிதமான மூலநோயையும் பிராணாயாமம் பயிற்சியின்



ஓர் அங்கமான 'மூல பந்தம்' என்னும் பயிற்சியினை செய்து வந்தால் முழுமை யாகக் குணப்படுத்தும். இந்த அற்புதமான யோக சிகிச்சை முறையை ஒரு யோகாசன ஆசிரியரின் வழிகாட்டலில் பழக வந்தால் மூலம் முழுமையாக நீர் மூலமாகும்.

MOHAN
சிலர் 'Star Wars' போன்ற science fiction கதைகளை வாசித்திருப்பீர்கள். இவற்றில் நிறைய கதாபாத்திரங்கள் உண்டு. பின்கதைகளும் அவர்களை மிக நுணுக்கமாக வர்ணிக்கின்றன. Science fictionனில் இவற்றைப்பற்றி கூட அறிய வேறு கதைகளையும் வாசிக்க வேண்டும். பொன்னியின் செல்வனை பற்றி கூட அறிய தமிழ் வரலாற்றை பற்றி கூட படிக்க வேண்டும் என கல்கி கூறியுள்ளார்.

எனவே Twilight, Star Wars போன்ற நீண்ட ஆழமான கதைக- ளை வாசிப்பவர்களும், Adventure மற்றும் Historical fiction வாசிக்கும் பதின்ம வயதினரும் தமிழ் வரலாறும், கலாசாரமும் பற்றி அறிய பொன்னியின் செல்வனை வாசிக்க வேண்டும். இப்போதைய ஆங்கில கதை புத்தகங்களை வாசிப்பவர்கள் மிகவும் Diverse ஆன இக்கதையை வாசித்தால் அவர்கள் பிரமித்து போவார்கள்.

(ஆரணி ஜனவரி 31, 2015 இல் ரொறொன்ரோ தமிழ்சங்கத்திலும், பெப்ரவரி 05, 2015 இல் CTR வானொலியிலும் ஆற்றிய உரை).





**Kingsway-Queensway**

சந்திக்கருகாமையில்

- எட்டு நிமிடங்களில் ரொரன்ரோ டவுன் ரவுன்
- இரண்டு நிமிடங்களில் கார்டினர் விரைவுப் பாதை
- நிமிடங்களில் பாடசாலை, வணிக மையங்கள்
- 24 மணிநேர பாதுகாவலர்கள் மற்றும் ரெனிஸ் கோர்ட், உடற்பயிற்சியரங்கம், உள்ளக,வெளியக நீச்சல் குளங்கள்
- குறைந்த விலையில் சகல வசதிகளும் உள்ளடங்கிய ஒரு அறை நவீன Condo

**Ragunathan** Mahesu – Sales Rep – **416-450-6833**

VEEDU REALTY INC. BROKERAGE

**416-759.6000**

# பொன்னியின் செல்வன் - கல்கி - விமர்சனம்

இன்று நான் படித்த 'பொன்னியின் செல்வன்' என்ற கதையைப் பற்றி கூறப்போகின்றேன். இது கல்கி என்ற எழுத்தாளரால் எழுதப்பட்டது. இந்த கதைக்கு முன் நிகழ்ந்த கதைகளான 'சிவகாமியின் சபதம்' மற்றும் 'பார்த்திபன் கனவு' என்ற கல்கி எழுதிய மற்றைய புத்தகங்களையும் நான் வாசித்துள்ளேன்.

1950 களில் கல்கி வாரஇதழில் தொடர்கதையாக வெளியிடப்பட்ட கதை தான் 'பொன்னியின் செல்வன்'. இக்கதை 'புது வெள்ளம்', 'சுழற்காற்று', 'கொலைவாள்', 'மணிமகுடம்', 'தியாக சிகரம்' என்று 5 பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மொத்தமாக இது 2,400 பக்கங்களையும், 300 க்கு மேற்பட்ட அத்தியாயங்களையும் கொண்டது.

10 - 11ஆம் நூற்றாண்டின் சோழ ராஜ்யத்தை அடிப்படையாக வைத்து இக்கதை எழுதப்பட்டது. எனவே இது ஒரு சரித்திரம் கலந்த கற்பனைக் கதை எனலாம். பொன்னியின் செல்வன் என்று அழைக்கப்படுகிறவர் தான் இக்கதையில் இளைய சோழ ராஜகுமாரராக வரும் அருள்மொழி வர்மர். பிற்காலத்தில் அவர் இராஜராஜசோழன் என்று சரித்திரத்தில் புகழ் பெற்ற அரசராக வாழ்கிறார். புத்தகத்தின் பெயர் அருள்மொழி வர்மருடையதாக இருந்தாலும் பெரும்பாலான கதை வந்தியத்தேவன் என்ற ஒருவரையே முக்கியமான கதா-பாத்திரமாக கொண்டது.

சோழ நாட்டின் அரசன் சுந்தரசோழன் உடல் நலம் குறைந்து படுக்கையில் இருக்கிறார். இந்த நேரத்தில் காஞ்சியில் இருக்கும் சுந்தரசோழனின் மூத்தமகன், ஆதித்தகரிகாலன் தஞ்சாவூரில் இருக்கும் தன் தந்தையிடமும் பழையாற்றில் இருக்கும் தங்கையான இளவரசியிடமும் ஓலைகள் எழுதி தன் நண்பன் வந்தியத்தேவன் மூலம் அனுப்புகிறார். இரண்டு ஓலைகளைக்கொடுக்க காஞ்சியில் இருந்து சோழ நாட்டிற்கு செல்லும் வந்தியத்தேவனுடன் இக்கதை ஆரம்பிக்கிறது.

இரு ஓலைகளை கொடுக்கும் சிறிய வேலையை மேற்கொண்ட வந்தியத்தேவன் எவ்வாறு 'அடுத்த அரசனாக வரப்போவது யார்?' என்ற பெரும் சண்டையில் மாட்டுப்படுகிறார்? என்பது மீதிக்கதை. வந்தியத்தேவன் மூலமாக நாம் பல கதாபாத்திரங்களை சந்திக்கிறோம். இக்கதையில் மொத்தமாக 55 கதாபாத்திரங்கள் உண்டு. இதில் முக்கிய கதாபாத்திரங்கள் 37 ஆகும்.

சோழ நாட்டிற்கு செல்லும் பாதையில் தன் நண்பன் கந்தமாறன் வீட்டில் தங்கும் வந்தியத்தேவன், ஒரு பெரிய சூழ்ச்சியில் மாட்டுப்படுகிறார். கந்தமாறன் வசிக்கும் அரண்மனையில் சோழ நாட்டின் பல முக்கியமானவர்கள் கூடி அடுத்த அரசன் யாராக இருக்க வேண்டும் என்று பேசிக் கொள்கிறார்கள். சுந்தரசோழனின் மகன்கள் அல்லாமல் அவரது சகோதரரான மதுராந்தகதேவரை நியமிக்கின்றனர். இதை வந்தியத்தேவன் ஒட்டுகேட்கிறான். அந்த இரவிலிருந்து வந்தியத்தேவனின் வாழ்க்கை மாறுகிறது.

அழகும், அறிவும் உள்ள இளவரசி குந்தவை தேவி, அழகும், வஞ்சகமும் நிறைந்த பழுவூர் இளையராணி நந்தினி, வீர வைஷ்ணவன் என போற்றப்படும் ஆழ்வார்கடியான் போன்றவர்களை வந்தியத்தேவன் சந்திக்கிறான். இவர்களில் சிலர் நண்பர்கள், சிலர் எதிரிகள், சிலர் நண்பர்கள் போல இருந்து எதிரிகள் ஆகின்றனர். சிலர் எதிரிகளாக இருந்து நண்பர்களாகின்றனர்.

இளவரசன் ஆதித்தகரிகாலர், அவரது தம்பி அருள்மொழிவர்மர், அவர்களது தந்தையின் சகோதரர் மதுராந்தகதேவர் ஆகியவர்களில் யார் அடுத்த அரசர் ஆவார்? அல்லது பாண்டிய நாட்டின் 'அரசர்' சோழ நாட்டை கைப்பற்றுவாரா? இதுதான் கேள்வி. கடைசி புத்தகத்தின் கடைசி அத்தியாயம் வரை இதற்குப் பதில் கிடையாது.

முதல் கூறியது போல் இதில் 55 கதாபாத்திரங்கள் உண்டு. இவற்றில் பல வகையானவர்கள் இருக்கிறார்கள். நீண்ட கதை என்பதால் ஒவ்வொருவரைப் பற்றி ஆழமாக அறியலாம். இவர்களில் பலர் பெண்கள், சிலர் வலது குறைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



குந்தவை, நந்தினி, படகோட்டியான 'சமுத்திர குமாரி' பூங்குழலி, இளவரசி வானதி, ஊமைராணி மந்தாகினி, செம்பியன் மாதேவி என்று பல பெண்கள் இக்கதையில் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஆண்களும் பெண்களும் ஒரே அளவில் சமமான முக்கியத்துவம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். பல குலத்திலும், தொழிலிலும், ஆண்களுக்கு நிகராக பெண்கள் இக்கதையில் உண்டு.

இப்போதைய பல தமிழ்ப்படங்களில் பெண் கதாபாத்திரங்களை எடுத்துவிட்டால் படத்தின் கதையில் ஒரு வித்தியாசமும் காணப்படாது. ஆக கதாநாயகனுக்கு காதலிக்க ஒருவரும் இருக்கமாட்டார்கள். அவ்வளவுதான். ஆனால் பொன்னியின் செல்வனில் குந்தவை, நந்தினி, மந்தாகினி ஆகிய மூவரில் ஒருவர் கூட இல்லாவிட்டால் இந்தக்கதை வேறுவிதமாக போயிருக்கும். மந்தாகினி இல்லாவிட்டால் இக்கதையின் முக்கிய கதாபாத்திரங்கள் கதையின் ஆரம்பத்திலேயே இறந்திருப்பார்கள்.

அருள்மொழிவர்மர் அக்காவின் வார்த்தையை மீறமாட்டார். அத்தகைய அக்கா தான் குந்தவை. இதை நீங்கள் 'இராஜராஜ சோழன்' படத்திலும் பார்த்திருப்பீர்கள். அரசு உரிமை இல்லாவிட்டாலும் சுந்தர சோழனை விட குந்தவையின் சொல்லுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகம் இருந்தது.

நந்தினிக்கும் குந்தவை போல் மதிப்பு இருந்தது. குந்தவை தன் விருப்பங்களை நல்ல முறையில் சாதிப்பது போல் நந்தினி தீயவழியில் நிறைவேற்றுகிறார். தனது அழகினால் மற்றவர்களை மயக்கி தன் தேவைகளுக்கு அவர்களை புத்திசாலித்தனமாக பயன்படுத்துகிறார்.

பொதுவாக ஆண் கதாபாத்திரங்கள் போர்க்களத்தில் முக்கியமாக காணப்படுகிறார்கள். ஆனால் அங்கே அவர்கள் வீரர்களாக இருந்தாலும் ராஜதந்திரத்தில் குந்தவையும் நந்தினியும் மிக திறமைசாலிகள். இவர்களை விட மந்தாகினி ஊமை மற்றும் காது கேட்க முடியாதவர். அதாவது வலது குறைந்தவர். அவர் எந்த வழியிலும் தனக்கு முக்கியமானவர்களை காப்பாற்ற விரும்புபவர்.

ஏன் இவ்வாறு விவரித்து கூறுகிறேன் என்றால் பொன்னியின் செல்வனில் மிக 'Diverse' ஆன கதாபாத்திரங்களுண்டு. வெவ்வேறு மதத்தவர், பெண்கள், மற்றும் வலது குறைந்தவர்கள் இருக்கின்றனர்.

பொன்னியின் செல்வன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சம்பவம். 60 வருடங்களுக்கு முன் கல்கியினால் எழுதப்பட்டது. இவ்வளவு காலத்திற்கு முன் வாழ்ந்தவர்களின் வாழ்க்கையை 60 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவரின் பார்வையில் பார்க்கிறோம்.

பொன்னியின் செல்வன் இப்படி இருக்கையில் இப்போதைய ஆங்கில கதைப்புத்தகங்களின் முக்கிய பிரச்சினை Diversity (பன்முகத்தன்மை) இல்லாதமை. வேறு இன, மத கதா-நாயகர்களும், பெண்கள், வலதுகுறைந்த கதாநாயகர்களும் காணப்பட வேண்டும் என பலர் போராடுகிறார்கள். இப்படி நடந்தாலும் கதை படமாக எடுக்கப்பட்டவுடன் Diversity உள்ள கதை Diversity இல்லாமல் போய்விடும். உதாரணம்: The Hunger Games புத்தகங்களின் படங்கள். இதில் கதாநாயகி சிறுபான்மை இனத்தவராக இருந்தாலும் படத்தில் அவர் பெரும்பான்மை இனத்தவராக காட்டப்பட்டார். எனவே இவற்றை எல்லாம் உள்ளடக்கும் Diversity உள்ள பொன்னியின் செல்வனை எழுதிய கல்கியின் திறமை பாராட்டத்தக்கது.

பொன்னியின் செல்வனின் பல கதாபாத்திரங்கள் உண்மையில் வாழ்ந்தவர்கள் அல்லவா? இப்போதைய கனடாவில் பெண்கள், வலது குறைந்தவர்கள், வேறு இனத்தவரையும், வேலைகளில் சேர்க்க அரசு சட்டத்தின்படி Quota போட வேண்டிய நிலைமையில் இருக்கையில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் பெண்கள் ஆண்களுடன் சமமாகவும், வலது குறைந்தவர்களும் வீரமாகவும் இக்கதையில் இருப்பது மிக நன்றான விடயம். அக்காலத்தமிழர் இவ்வாறு இக்காலத்தவரையும் விட முன்னேற்றமும், எல்லோரையும் சமமாக மதிப்பவர்களாகவும் இருந்தவர்கள் என இக்கதைமூலம் காணலாம்.

இக்கதையை வாசிக்கும்போது கதை விறுவிறுப்பாக செல்லும். இதில் அக்காலத்தின் வாழ்க்கை முறை சூழல் போன்றவற்றை பற்றியும், இக்கதையை அடிப்படையாக கொண்ட வரலாறு பற்றியும், வாசகர்கள் கதையை விளங்கி கொள்வதற்காக விபரங்கள் நிறைய உண்டு. உங்களுக்கு இதில் ஆர்வம் இருந்தால் நேரம் போவது தெரியாமல் கதையை வாசித்து முடிக்கலாம். ஆனால் சிலருக்கு இது பிடிக்காது. இது ஒன்றை விட இக்கதையில் வேறு ஒரு பெரிய குறையும் இல்லை.

Twilight ஆங்கில கதைப்புத்தகங்களை எடுங்கள். உங்களில் சிலர் இதை வாசித்திருப்பீர்கள். அதுவும்



ஞா. ஆரணி
அகவை 16

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# EDUCATION

## Review Questions15 -5

### Biology IB

(A)Explain how memory T cells help provide immunity against future infections.

(B) Heart rate of person decreases as his/ her fitness increases. Give a reason.

(C) How do you compare heart rate and blood flow of a person when at rest and during exercise.

### CHEMISTRY 12

1) Determine the energy of one mole of photon.(wave length 260nm).
2) How many quanta of radiation is required for an energy of 5J? Frequency of the radiation is $2.42 \times 10^{15} s^{-1}$
3) Calculate the momentum of a photon with (i)A 700nm wavelength (ii) 200 eV energy

### PHYSICS 12

A 50 kg building material is pulled up vertically by a rope for a distance of 50m. The maximum tension that the rope is 600N. What is the shortest time, starting from rest in which the material can be brought up ?

## Answer Key : 15-4

### ✓ CHEMISTRY IB

1. (i) $K_b = K_w / K_a = 5.26 \times 10^{-10}$ ($pK_a = 4.72$ )

$N_3^- + H_2O \rightarrow HN_3 + OH^-$

| | $N_3^-$ | $H_2O$ | $HN_3$ | $OH^-$ |
|---|---|---|---|---|
| *I* | 0.2 | - | - | - |
| *C* | $-x$ | | $+x$ | $+x$ |
| *E* | $(0.2-x)$ | | $x$ | $x$ |

$K_b = [HN_3][OH^-]/[N_3^-]$ ;
$[OH^-] = 1.03 \times 10^{-5}$ mol/L ;
pOH = 4.98 ; pH = 14-4.98 = 9.02

2). $HC_3H_5O_3 + NaOH \rightarrow NaC_3H_5O_3 + H_2O$
$(0.18-x)$ $\quad x \quad x \quad x$

pH = pKa + log $[NaC_3H_5O_3]$ / $[NaC_3H_5O_3]$
$x = 0.16$ mols

3). 8 stereoisomers

### ✓ PHYSICS 11& 12

(i) First ball (A) Calculate the time required to reach maximum height

$V_f = V_i + a\Delta t$
$v_i = 25.0 m/s$, $v_f = 0 m/s$, $a = -9.8 m/s^2$ ;

$\Delta t = 2.5$ s

For the 2nd ball(B)
$v_i = ?$, $v_f = 0 m/s$, $a = -9.8 m/s^2$; $\Delta t = 2.5-1.2)s$

$V_f = V_i + a\Delta t$ ; $V_i = 13.3 m/s$ (ans 13.3 m/s)

(ii)Whiplash is a neck injury when the neck is forcibly bend forward and then backward or / backward and then forward. It occurs as a result of sudden deceleration or acceleration in an automobile accident.

(ii)When an object falling down wards under the influence of gravitational force its drag force increases with the increase of velocity of the falling object. When the drag force becomes equals to the gravitational force, the net force acting on the object zero. Then the object falls with a constant velocity is called terminal velocity.

### ✓ CALCULUS & VECTORS 12

(i) $\lim_{x \to 0} \frac{ax^2+bx+c}{cx^2+bx+a}$ ; *ans* $C/a$

(ii) $\lim_{h \to -4} \left( \frac{\frac{1}{4} + \frac{1}{h}}{4+h} \right)$ ; *ans* $= \frac{1}{16}$

(iii) $\lim_{x \to 2} \frac{x \ +2}{x^3+8}$ $ans = \frac{3}{15}$

(iv) $\lim_{x \to 1} \frac{x^6 - 1}{x^{10} - 1}$ $ans = \frac{1}{12}$

(v) $\lim_{x \to -1} \frac{x^2+x-5}{x+1}$ ans = DNE

Ans. key 15-5 - next issue
☎ 647 341 3975
K.A.Srikrishnaraj PhD
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் வாழ் நாள் சாதனையாளர் கௌரவிப்பு விழா

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், அண்மையில் அமரத்துவம் அடைந்த அதிபர் கனகசபாபதி அவர்களுக்கும், கவிஞர் கந்தவனம் அவர்களுக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கும் விழாவினை ஏற்பாடு செய்துள்ளது. மார்ச் மாதம் 14ம் திகதி மாலை ஸ்காபுறோ சிவிக் சென்ரர் நிலையத்தில் எழுத்தாளர் இணையத் தலைவர் திரு.க.சிவநாயகமூர்த்தியின் தலைமையில் நடைபெற இருக்கும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு பொதுமக்கள் அனைவருக்கும் எழுத்தாளர் இணையம் வேண்டுகோள் விடுக்கின்றது.

விழாவின் முதல் நிகழ்வாக மறைந்த அதிபர் கனகசபாபதி அவர்களின் திருவுருவப் படத்துக்கு பேராசிரியர் முகுந்தன் விமலேஸ்வரன் மலர் மாலை அணிவிப்பார். அதைத் தொடர்ந்து அதிபரின் மைத்துனரான திரு. குரு அரவிந்தன் வரவேற்புரை நிகழ்த்துவார். அதன் பின்னர் இணையத் தலைவர் திரு.க. சிவநாயகமூர்த்தி தலைமை உரை ஆற்றுவார். அடுத்து பேராசிரியர் சுப்பிரமணியன் தகைமை சான்றுரை நிகழ்த்துவார். பின்பு பிரதம விருந்தினரை தலைவர் கௌரவித்தலும், பிரதம விருந்தினரின் சொற்பொழிவும் இடம்பெறும்.

விசேட விருந்தினர்களாகக் கலந்து கொள்ளும் செல்வி. றாதிகா சிற்சபைஈசன் எம்.பி., மார்க்கம் மாநகரசபை உறுப்பினர் திரு.லோகன் கணபதி ஆகியோர் அடுத்து உரையாற்றுவார்கள். அதனை தொடர்ந்து கவிஞர் கந்தவனத்தைப் பற்றி பேராசிரியை பார்வதி கந்தசாமி ஆங்கிலத்திலும், கலாநிதி இ. பாலசுந்தரம் தமிழிலும் அறிமுக உரை நிகழ்த்துவார்கள். கவிஞர் கந்தவனத்துக்கு வீரகேசரி மூர்த்தி மலர் மாலை அணிவித்தும், கவிஞரின் பாரியாருக்கு திருமதி ராஜ்மீரா மலர்க்கொத்து வழங்கியும் கௌரவிப்பார்கள்.

பிரதம விருந்தினர் கவிஞருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கி கௌரவிப்பார். பின்னர் கவிஞர் கந்தவனம் அவர்கள் உரையாற்றுவார். அதன் பின்னர் காலம் சென்ற அதிபர் கனகசபாபதி பற்றிய அறிமுக உரையை அதிபர் திரு. சிவபாலு தமிழிலும், அதிபர் சின்னையா சிவநேசன் ஆங்கிலத்திலும் நிகழ்த்துவார்கள். அடுத்து அவருக்கு வாழ்நாள் சாதனை விருது வழங்குதலும், விருது பெறுவோரின் உரையும் இடம்பெறும். அதன் பின்னர் கவிஞர் கந்தவனத்தைப் பற்றி கவிஞர் ஞானகணேசன் கவிதை வாசிப்பார். அதிபர் கனகசபாபதியைப் பற்றிய கவிதையை திரு. வேலாயுதம் இராஜலிங்கம் வாசிப்பார். எழுத்தாளர் இணைய செயலாளர் திருமதி சிவநயனி முகுந்தனின் நன்றி உரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெறும்.



# காக்காய்வலி - மூளையில் ஏற்படும் மோசமான நரம்பியல் ஒழுங்கீனம்

மூளை பில்லியன் கணக்கான நரம்புக் கலன்களால் உருவானதொன்று. இதில் மின்சார, இரசாயன சைகைகள் (Signals) எந்த நேரமும் செயல்பட்டுக் கொண்டிருக்கும். திடீரென்று இந்த சைகைகளில் மாற்றம் நிகழ்வதால் காக்காய்வலி (Epilepsy) ஏற்படுகிறது. பழைய அகராதிகளில் இதனை, 'வாதசன்னி' எனவும் குறிப்பிட்டுள்ளனர். பலரது வாழ்வில் வலிப்பு முறைகளை (Seizures) பலர் அவதானித்திருக்கலாம். ஆனால் எல்லாம் காக்காய்வலி அல்ல. பல்வேறு வலிப்பு முறைகளை அவதானித்த பின்பே இந்த ஒழுங்கீனம் உறுதிப்படுத்தப்படு கிறது. இது ஒரு நோய், உளவியல் ஒழுங்கீனம், தொற்றுவது என்று கொள்ளமுடியாது. மூளையில் மாறுபாடான நரம்பியல் சில கால், கை என்பவற்றில் ஏற்படும் செயற்பாடுகளே முக்கிய காரணமாகும்.

பொதுவாக காக்காய்வலி உள்ளவர்களின் செயல்களைப் பார்த்து நாமும் பயப்படக் கூடும். சிறுவர், இளையோர், பெண்கள், முதியோர் எவரும் இப்பாதிப்புக்கு உட்படலாம். இந்நோய் உள்ளவர்களது தசையிறுக்கம், கட்டுப்படுத்தமுடியாது. உடல் அசைவுகளே விழிப்புணர்வு மாற்றம், உணர்வு மாற்றம் என்பவற்றினால் பாதிப்புறுவர். மேலதிகமான மூளை மின்சார வெளிப்பாடுகளே தற்காலிகமாக நடத்தைகளை மாற்றுகின்றன. சில விநாடிகள் முதல் சில நிமிடங்கள் வரை இவ்வலிப்பு நீடிக்கும். நீண்டகால வலிப்பால் மூளை சேதமுறல் ஏற்படும். சில வலிப்புகள் சாதாரணமாக முடிந்து விடலாம். சிலவகை தடுமாற்றம், பலவீனம், களைப்பு, தலைவலி என்பவற்றினை ஏற்படுத்தலாம்.

இந்த 'அமைதியான ஒழுங்கீனம்' (Silent disorder) திடீரென தோன்றுவதாகும். இதன் தன்மைகள், பாதிப்புறும் நிலைகள், மூளையின் செயற்பாடு என்பவற்றினை ஆதாரங்களாக கொண்டு Partial epilepsey, Complex, Tonic, Clonic, Atonic, Myoclonic என 6 வகைகளாக மருத்துவர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இவை எல்லாம் முகம், உடல், கை, கால் என்பவற்றுடன் தொடர்புறுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் ஒரு மில்லியன் மகப்பேற்றுக்கால பெண்கள் பாதிப்புறுவதாக கருதப்படுகிறது. கனடாவில் 330,000 மக்கள் பாதிப்புற்றுள்ளனர். இதனால் ஒவ்வொரு மார்ச் மாதமும் இதற்குரிய விழிப்பு மாதமாக பிரகடனம் செய்துள்ளனர்.

குழந்தைகளாக இருக்கும்போது ஏற்படும் காக்காய்வலி மிகவும் கொடுமையானது. இதனைக்கண்டு பல பெற்றோர்கள் பயம் கொள்வர். அதேபோல இளம் வயதினர் களுக்கும் இந்நோய் ஏற்படலாம். பெற்றோர் களுக்கு இது ஒரு சவாலாக அமைந்து விடுகிறது. பாடசாலைகளில், விளையாட்டு களில் மற்றும் வெளியே செல்லும் நிலைகளில் இந்நோய் ஏற்பட்டால் என்ன செய்வதென்று பலருக்கு தெரிவதில்லை. இதனால் பிள்ளைகளின் பெற்றோர்கள் பாடசாலையில் அவரைப்பற்றிய விபரங்களைக் கூற வேண்டும்.



பொதுவாக காக்காய்வலி ஏற்பட முன்பு தற்காலிக தடுமாற்றம், பார்வை மாற்றம், கால்களையும் கைகளையும் கட்டுப்படுத்த முடியாத வலி உணர்வு, உணர்விழத்தல் மற்றும் பொதுவான உடல் அடையாளங்கள் ஏற்படும். மூளையில் உள்ள கலங்கள் பாதிப்புறுவதால் அல்லது ஒழுங்கீனமடைவ-தால் மயக்கநிலை ஏற்படும். இது ஏற்படும் கால இடைவெளிகளைக் கொண்டு மருத்துவர்கள் எப்படி மூளை செயல்படுகின்றது என்பதனை ஆய்வு செய்வர். சிலருக்கு பகுதி (Partial) அளவில் உணர்வின்மை ஏற்படலாம். முற்றாக நினைவு இழக்கமாட்டார்கள். அவர்கள் பார்க்கும் விதம், மணம், உணர்வு, சுவை, ஓசை என்பவற்றினை அறிய வேண்டும். இவர்கள் குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் கட்டுப்படுத்த மாட்டார்கள். கூட்டாக சேர்ந்த அல்லது சிக்கல் நிறைந்த மயக்கநிலை (Complex Seizures) சிலருக்கு ஏற்படலாம். இவர்கள் நினைவிழப்பர். இப்படியானவர் களை உடன் எழுப்பமுடியாது. ஒரேவிடயத்தை திரும்ப செய்வார்கள். பல பரிசோதனைகள் இதற்கு தேவைப்படலாம். அடிக்கடி கண்களை வெட்டுவர், நாக்கை கடிப்பர், சொண்டினை இழுப்பர், தசைகள் இறுகும், கால் கைகளை உணர்விழக்கச் செய்யும், திடீரென விழுதல், கழுத்து, கைகள் பாதிப்புறும், உடல் நடுங்கும், சிறுநீர்ப்பை செயலிழக்கும், சிறுநீர் சிலருக்கு வெளியேறும். இவை எல்லாம் ஒருவருக்கு ஏற்படுமென்பதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாக நிகழலாம். எம்மவர்கள் திறப்பை அல்லது ஒரு கம்பியை வாய்க்குள் திணிப்பது நாக்கு துண்டிக்கப்படாமல் இருப்பதற்கேயாகும்.

சிலருக்கு சில நிமிடங்கள் காக்காய்வலி நீடிக்கலாம், மயக்கமடைந்தும், மூச்சு விடுதல் சிரமமாயிருக்கும். காய்ச்சல் இருக்கும். நீரிழிவு நோய் இருக்கும். தலையிடி தொடர்ந்து இருக்கும். இந்தக் குழப்ப நிலையிலேயே மருத்துவர்கள் உதவி செய்ய முயற்சிக்கின்றனர். பலருக்கு இது பல தடவை வருவதால் அதற்கு பழகிப்போவர்.

காக்காய்வலிக்கு குறிப்பான ஒரு காரணத்தை கூறமுடிவதில்லை. தொடர்ந்து வரும் மரபணு செல்வாக்கு (Genetic Influence) இதில் முக்கியமாக தொடர்பு படலாம். தொடர்ந்து தலைமுறையூடாக இப்படியான நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. காக்காய்வலி நோய் நிபுணர்கள் 500 வகையான மரபணுக்கள் இதில் தொடர்புறுவதாக கூறுகின்றனர். சிலரது காக்காய்வலிக்கு மரபணு ஒரு பகுதியாக வும், உணர்வுபூர்வமான சுற்றாடலும் கரணமாகலாம் என்பர். தலையில் ஏற்படும் காயம் (Head Trauma) காரணமாகவும் இந்நோய் ஏற்படலாம். மூளையின் நிலைமை (Brain Conditions) இதில் தொடர்புறலாம். மூளைக்கட்டிகள், பக்கவாதங்களும் காரணமாகலாம். 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பக்கவாதம் (Stroke) முக்கிய காரணமாகலாம். தொற்று நோய்கள் (Infections) இந்நோய்க்கு காரணமாகலாம். மெனின்ஜிட்டிஸ் (Meningitis), எய்ட்ஸ் வைரஸ் நோய் என்பனவும் தொடர்புறலாம். குழந்தை பிறக்கும்வேளை ஏற்படும் காயம் (Prenatal Injury) மூளையை பாதிக்கலாம். தாயாரின் தொற்றுநோய், போசாக்கின்மை குழந்தைக்கு பிராணவாயு குறைவடைதல் என்பன காரணமாகலாம்.

காக்காய்வலி நோய்க்குள்ள ஆபத்தான காரணிகளில் வயது அடிப்படை முக்கியம். பொதுவாக சிறுவயதிலும், 60 வயதுக்கு மேற்படவும் அதிகம் நிகழலாம். எனினும் எந்த வயதிலும் நிகழலாம். குடும்ப வரலாறு, நித்திரையின்மை, ஹார்மோன்கள் மாற்றம், உணவை தவிர்த்தல், ஆரோக்கிய உணவு உண்ணாமை, மருந்தினை பாவிக்காது விடல், ஆசனப்பட்டி (seat belt) அணியாது விடல், பனிச்சறுக்கல், பைசிக்கிள் சவாரி விபத்துகள், மோட்டார் சைக்களில் செல்லும் போது தலைகவசம் அணியாது விடல், மது, சிகரெட் பாவனை என்பனவும் காரணமாகலாம்.

காக்காய்வலிப்பு ஏற்படும் போது நிகழும் சில சந்தர்ப்பங்கள் மிகவும் ஆபத்தானவை. திடீரென விழுதல், நீச்சல் தடாகங்களில் அமிழ்ந்து போதல், வாகன விபத்து ஏற்படல் போன்றன நிகழ சந்தர்ப்பங்கள் உள. அதிகமான காக்காய்வலி உள்ளவர்களது சாரதி பத்திரங்கள் மருத்துவர்களால் தடை செய்யப்படுகின்றன. கர்ப்பமுற்ற நிலையில் மயங்குவதால் வயிற்றில் உள்ள பிள்ளையும் இறக்க நேரிடலாம். உள ரீதியான பிரச்சினைகள் காரணமாக தற் கொலைகள் நிகழலாம். அடிக்கடி விழுவதால் அல்லது 5 நிமிடங்களுக்கு நினைவு வராது விட்டால் மூளை சேதமுறலாம். திடீர் காக்காய்வலி மரணம் (Sudden Unexplained Death in Epilepsy and Sudep) நிகழலாம். மக்களில் ஒரு வீதத்தினர் இந்த பிரச்சினையால் மரணிக்கின்றனர்.

காக்காய்வலி வந்தால் முதலில் நரம்பியல் பரிசோதனை (Neurological Examination) இடம்பெறலாம். நடத்தை, உடல் திறன்கள், மூளையின் செயல்பாடு என்பன பரிசோதிக்கப்படும். அத்துடன் இரத்தப் பரிசோதனையும் இடம் பெறலாம். இதில் பரம்பரை தன்மை, மயக்கத்துடன் கூடிய ஏனைய தன்மைகள் அறியப்படும். மூளையின் செயல்பாடுபற்றி அறிய Electroencephalogram (EEG) என்ற பரிசோதனை இடம்பெறும். சில ஓட்டும் சாதனங்களை தலையில் பொருத்தி மூளையில் உள்ள மின்னலைகள் பற்றி அறியப்படும்.

இதுவே காக்காய்வலிக்கான முக்கியமான சோதனையாகும். காக்காய்வலி இருந்தால் பதிவு செய்யப்படும் அலைகளில் மாற்றங்கள் ஏற்படும். இதிலிருந்து எப்படியான ஒழுங்கீனம் என்பதினை மருத்துவர் கண்டு கொள்வார். அத்துடன் Computerized Tomography (CT) மூலம் ஒளிக்கதிர்களை செலுத்தி மூளையின் குறுக்களவை பரிசோதனையிடலாம். இது மூளைகளில் கட்டிகள் இருந்தால் கண்டறியும். அடுத்து Magnetic Resonance imaging (MRI) மூலம் சக்தியுள்ள காந்தம், றேடியே அலைகளை செலுத்தி மூளை பற்றி அறியமுடியும். இதனால் இவ் ஒழுங்கீனம் பற்றி மூளை பற்றி அறியமுடியும். Functional MRI (FMRI)



சிந்தனைப் பூக்கள்
எஸ். பத்மநாதன்

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# காக்காய்வலி...

## 35ஆம் பக்கத்தொடர்ச்சி

35ஆம் பக்கத்தொடர்ச்சி

மூலம் மூளையில் செல்லும் இரத்த அளவு பற்றி அறியப்படும். சத்திர சிகிச்சைக்கு இம்முறை உதவலாம். Positron Emission Tomography (PET) என்பதன் மூலம் றேடியோ அலைகளை நரம்புகளூடாக செலுத்தி பாதிப்புள்ள மூளை பகுதிகளை அறிய முடிகிறது. MRI, ECG சோதனைகள் வெற்றி அளிக்காதுவிடில் Single Photon Emission Computerized Tomography (SPECT) முறை உதவுகிறது. இந்த முறையில் முப்பரிமாண 3D முறையில் படம் பெறமுடிகிறது. இத்துடன் நரம்பு உளவியல் சோதனைகள் (Neuropsychological) பரிசோதனை இடம் பெறலாம். இதன் மூலம் வைத்தியர்கள் ஒருவரது சிந்தனை, ஞாபகசக்தி, பேச்சுதிறன் என்பவற்றினை அறிந்து கொள்வர். எனவே நரம்பியர் நிபுணர், நிழலுரு நிபுணர், மனநல வைத்தியர்கள் எல்லோரும் இணைந்து தினசரி ஒன்று கூடி கலந்தாலோசிப்பர்.

கனடாவில் உள்ள எமது குழந்தைகள், இளையோர், முதியோர் எவ்வளவு அதிஷ்டம் செய்துள்ளனர் என தெரிகிறது. தாயகத்தில் எதுவித விசேட சோதனை களையும் செய்ய முடியாது கைவிடப்பட்ட சிறுவர்களும் முதியோர்களும் தினசரி மரணபயத்துடனும் ஏக்கத்துடனும் வாழ்ந்து வருகின்றனர் என்பதனை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. ஒருவகையில் பணமின்மை. மறுவழியில் இத்தகைய சோதனைக் கருவிகளும் இல்லை. விசேட நிபுணர்களும் அங்கு இல்லை.

திடீர் வலிப்பு நோய்க்கு ஆரம்பத்தில் மருந்துகளே வழங்கப்படுகின்றன. இதனால் காக்காய் வலியை முற்றாக குணப்படுத்த முடியாது எனினும் அடிக்கடி ஏற்படும் வலிப்புகளின் காலத்தை நீடிக்க முடியும். இவ் ஒழுங்கீனத்தில் பல ஒழுங்கீனங்கள் உள்ளமையால் பல்வேறு மருந்துகள் பாவனையில் உள்ளன. Manotherapy என்ற ஒரு மாத்திரை மட்டும் பயனுள்ளது. சிலவேளைகளில் பல மருந்துகள் பாவிக்கப்படலாம்.

பல மருந்துகள் பாவிக்கப்படுவதனால் தூக்கமயக்கம், தலைவலி, பசி குறைதல், வயிற்று குமட்டல், நடுக்கம், நிறை கூடுதல்



அல்லது குறைதல், பார்வை குறைவு, ஞாபகம் இன்மை, முரசு வளர்தல், மயிர் விழுதல் அல்லது அதிகம் மயிர்விழுதல், சரும அரிப்பு, ஒவ்வாமை போன்றன ஏற்பட வாய்ப்புண்டு. சிலருக்கு Osteoporosis எனப்படும் எலும்பு நோய் ஏற்படலாம். எலும்பு அடர்த்தி குறைவதால் இப்பிரச்சினை எழலாம். கூடுதலாக பெண்களுக்கு ஏற்படும் எலும்பு நோய் இதுவாகும்.

மருந்துகள் பலனளிக்காத நிலையில் சத்திரசிகிச்சை செய்ய நேரிடலாம். மூளையில் பிரச்சினையுள்ள மூளை பகுதியை நீக்க வேண்டி இருக்கும். வலிப்பு ஏற்படும் இடம் சத்திர சிகிச்சையால் நீக்கப்படின் ஏனைய இடங்களுக்கு செல்லும் வலிப்பினை தவிர்க்கலாம். இந்த சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தால் மிக நலமுண்டு. அண்மைய தொழில் நுட்ப வசதிகளின் முன்னேறங்களால் மிகவும் பாதுகாப்பான முறையில் சத்திரசிகிச்சைகள் இடம் பெறுகின்றன. Vagus Nerve Stimulation (VNS) முறையில் இதற்குரிய பற்றறி சக்தியுள்ள பொருட்களை உட்செலுத்தும் முறையாகும். இந்த ஊக்கி கருவி மார்பு தோலில் பொருத்தப்படும் இதயத்தின் பிரச்சினைக்கு பொருத்தப்படும் Pacemaker போன்றதே இதுவும். இக்கருவி இடது பக்க Vagus நரம்பினை தூண்டி மின்சார சைகைகளை மூளைக்கு அனுப்ப உதவுகிறது. இந்த சைகைகள் வலிப்பு ஏற்படுவதனை தவிர்க்கிறது. இதனை எல்லோருக்கும் பயன்படுத்த முடியாது. சிலருக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

காக்காய் வலிப்பினை தவிர்ப்பதற்கு சில தனிப்பட்ட முறைகளை சிபார்சு செய்துள்ளனர். யோகா, மாசாஜ் வைத்தியம், தியானம், மூலிகைகளின் பயன்பாடு, வரைதல், சங்கீதம், வளர்ப்பு பிராணிகளை வைத்திருதல் போன்றவற்றை செய்யலாம். இது விஞ்ஞான ரீதியானவை அல்ல. சரியான வைத்தியத்திற்கு மேற்பட்டவையே இவை. சரியான வைத்தியரை கண்டுபிடித்தல், வாழ்க்கை முறைகளை மாற்றுதல், உளச்சோர்வில் இருந்து விடுபடல். இதுபற்றிய அறிவை வளர்த்தல், சரியான மருந்துகளை தெரிவு செய்தல் போன்றவற்றினை செய்யலாம்.

'Epilepsy Canada' ஒரு தேசிய நிறுவனமாக செயல்படுகிறது. இதன் தலைவரான வைத்தியர் W. மக்கின்ரயா பேண்காம் என்பவர் அண்மையில் பல புதிய மருந்துவகைகள் அறிமுகமாகியுள்ளன என கூறுகிறார். அத்துடன் 17 மில்லியன் கனடியர்கள் Facebook கணக்கு வைத்திருப்பவர்களை இதற்காக பண உதவி செய்ய கோரியுள்ளார். ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்களை இதில் விடலாம் எனவும் ஆலோசனை கூறியும் உள்ளார். 'Lets break the silence surrounding epilepsy' என்பதே அவரின் தாரக மந்திரமாகும். 42 கனடியர்களுக்கு ஒருவர் தங்களுக்கு இப்படி ஒழுங்கீனம் உள்ளதாக உணர்கின்றனர். உள்ளூரில் காணப்படும் நிலையங்கள், இவ் ஒழுங்கீனம் உள்ளவர் களுக்கு பல உதவிகளை செய்கின்றன. பல தொண்டர்கள் சேவையால் கடிதமூலம் அறிவித்தல், நூல் நிலைய வசதிகள், பிரயாண வசதிகள் என்பவற்றினை ஒழுங்கு செய்கின்றன. தொடர்ந்து வலிப்பு ஏற்படுதல் மிகவும் ஆபத்து நிறைந்த தொன்றாகும். ஒன்றுக்கு பின் ஒன்றாக நிகழ்வது மிக ஆபத்தானது. உடனடியாக மருத்துவ வசதி ஏற்பட வேண்டும்.


**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician I.G.Ayurvedic Medical Services (SriLanka)



**மார்ச் 8 பெண்கள் தின நினைவு**



பால்
பாலியல்
காமம்
காதல்
பெண்
பெண்ணியம்
ஒரு ஆண் நிலை நோக்கு

நூல் அறிமுகம்
(சுய)விமர்சனமும் கலந்துரையாடலும்
வரவேற்பு
பறையிசை அடிகேணம் கலைக்குழு

| | செல்வி அரங்கு | சிவரமணி அரங்கு |
|---|---|---|
| சக்கரவர்த்தி குழுவினர் | குறு நாடகம் 1 | குறு நாடகம் 2 |
| பால் பாலியல் | அருண்மொழிவர்மன் | வனிதா நாதன் |
| காமம் காதல் | ?? | மயூ மனோ |
| பெண் பெண்ணியம் | எஸ்.கே.விக்கினேஸ்வரன் | சிறிரஞ்சனி |

நன்றியுரை: மீரபாரதி

விமர்சனமும் கலந்துரையாடலும்

நிறைவு
பறையிசை அடிகேணம் கலைக்குழு

இடம் : Don Montgomery Community Recreation Centre (formerly Mid-Scarborough Arena)
காலம் : பங்குனி 15, ஞாயிற்றுக்கிழமை (March 15, Sunday)
நேரம் : மாலை 6 மணி (6 pm)

நிகழ்வு குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்.
இந்த நாளை முன்கூட்டியே ஒதுக்கி வைப்பதற்கான முன் அறிவிப்பு இது

அனுசரணை
காலம் & உரையாடல் சஞ்சிகைகள் மற்றும் உயிர்ப்பு அரங்கக் குழு
காலம் செல்வம் அவர்களின் 'வாழும் தமிழ்' நூல்கள் கண்காட்சிக்கும் விற்பனைக்கு வைக்கப்படும்
&
கனடாவில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பான விபரங்களும் அதற்கான தீர்வுகளுக்கான தகவல்களும் காட்சிக்கு வைக்கப்படும்.


# இந்தக் கணம்

இப்போ இந்தக்கணத்தில் நான் வாழ்கின்ற படியால் நம்பிக்கையின் சக்தியை முற்றாக அனுபவித்து அதை வெளிப்படுத்துகிறேன்.

உனது இன்றைய பொழுதை நேற்றைய கழிவுக்குப்பைகள் நாசமாக்கி அழிக்க ஒருபோதும் விடாதே. இன்று இப்போ உனக்குக் கிடைக்கவிருக்கும் நன்மை களை, நாளைய குப்பைகளைப்பற்றிய உனது பயம் பறித்தெடுக்க அனுமதிக்காதே. இறந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்குமிடையில் மாறி மாறி நீ தாவும் போது இப்போ நிகழ்காலத்தில் நடப்பதை நீ தவறவிட்டு விடுகிறாய்.

புத்தம் புதிதாய் ஒன்றை ஆரம்பிக்க இன்று உனக்கு இதோ சந்தர்ப்பம் வந்திருக்கின்றது. நீ கைநீட்டி வாங்கப் போவதையும், கைகழுவி விடப் போவதையும் பற்றியே இப்போ சிந்தனை செய்! பழையவற்றைப் பறந்து போகவிடு! நன்மைகளை இப்போ அங்கீகரி! நாளை விடியும்போது நன்மை மட்டுமே உனக்கு வரக் காத்திருக்கும் என நம்பு! தேவையில்லாத அனுபவங்களை மீண்டும் மீண்டும் நினைத்து நினைத்து அக்குப்பை கூளங்களை இன்றுவரை நீ அலசிப் பார்த்துக்கொண்டு இருந்திருக்கலாம். இப்படி குப்பை கூளங்களை சேகரித்துப் பொத்தி வைப்பதை இன்றுடன் நிறுத்திவிடு. குப்பைகளைத் தேடி அலையாதே! உன்னுடன் இக்குப்பைகளை இழுத்துக் கொண்டு திரிவதை இன்றுடன் நிறுத்து!

**பழைய குப்பை கூளங்களிலிருந்தும் நாளைய பொழுதைப் பற்றிய பயத்திலிருந்தும் என்னை இன்று நம்பிக்கையுடன் விடுவித்துக் கொள்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 228


மேலதிக தகவல்களுக்கு
அழையுங்கள் 905-270-1214
416.907.6897



லலிதா புரூடி

# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER



## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

# 416.846.2798

**100% Guaranteed Result**



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளெக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**

**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**

304

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்



ஓடிய நைகரா ஓடாது நிற்கிறது!
உலக அதிசயத்தில் ஒன்று நையகரா.
அதைவிட அதிசயம் அது ஓடாது உறைந்திருப்பது!



ஆடை அணிகலன் ஆடம்பரங்கள் ஆண்டவன்
விரும்புவதில்லை. - பாடல்
ரேடியோவில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. மறுபுறம்
ரி.வி. யில் அதேவேளையில் இந்திய குடியரசு தினத்திற்கு
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வருகையின்போது நரேந்திர
மோடி அணிந்த உடை பல லட்சத்திற்கு ஏலம் போவது
பற்றி வாக்குவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தது



செக்கண்டபுளோர் செல்லம்மாவும் ஐபொட் அகிலாவும் சுப்பர் சிங்கர்
முடிவுகளை இன்னும் பார்த்து முடித்தபாடில்லை….
விஜய் ரி.வி.யின் சுப்பர் சிங்கர் முடிவுகள் உலகளாவிய
ரீதியில் பல சர்ச்சைகளை கிளப்பியுள்ளது.




வெற்றிப்பெருமிதம் ஒருபுறம், வேதனை மறுபுறம் வெற்றிக்காக
போராடியவர்க்குத்தான் அதன் வலி தெரியும்.
ஜெசிகாவின் முயற்சிக்கும் அவரது குடும்பத்தினர்,
ஆசிரியர்களின்
ஒத்துழைப்பையும் யாரும் மறக்கமாட்டார்கள்.



விமல் வீரவன்சாவின் மனைவி சசி வீரவன்ச கைது!
மேடைகளில் இனவாதம், துவேசம் பேசியவர்களெல்லாம்
வீதிக்கு வந்துவிட்டனர்.

பொலீஸ் ஜீப் காவலுடன் நகர்வலம் வந்தவர்கள் பொலீஸ் ஜீப்பில் கைது
செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றனர். செல்லம்மா…பார்தியே செய்தியை!
கோவில் வீதிகளில் தேர் இழுத்த காலம் போய், தேர்தல் முடிந்ததும்
பழைய அரசுடன் இணைந்து தில்லுமுல்லு பண்ணிய பலர் வீதி
வீதியாக இழுத்துச் செல்லப்படுகின்றனர்.



இந்த மாதம் ஐ.நா சபையில் இலங்கைப் பிரச்சினை விசாரணைக்கு எடுக்கப்
போயினமாம் என நியூஸ் அப்டேற் குடுத்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

மாலை தீவு முன்னாள் ஜனாதிபதி முகமெட் நசீட் தற்பொழுது கைது
செய்யப்பட்டது மட்டுமல்லாமல் வீதியில் நாய்போல
இழுத்துச்செல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.



உலகண்ணை எல்லா நாட்டிலும் பழைய ஜனாதிபதிமார் பிழைவிட்டா உப்பிடித்தான்
நாய்போல இழுத்துக்கொண்டு போவினமோ? என இழுத்தா ஆட்டிலறி
அன்னம்மா…..உலகர் சிரிக்க. செக்கண்ட் புளோர் செல்லம்மா சிரித்துக்கொண்டா
சொன்னா….உப்பு தின்றவன் தண்ணி குடிச்சுத்தான் ஆகவேணும். சின்ன வயதிலை
படிச்சது மறந்துபோனீங்களோ.



உலக அரங்கினில் தினம் தினம் தீவிரவாத தாக்குதல்,
பயங்கரவாதம், பொது இடங்களில் தலைகள் துண்டிப்பு,
அடித்துக்கொலை... இதுதான் இன்றைய தலைப்புச் செய்திகள்.
ஆனால் எத்தனை பாதுகாப்பு இருந்தும் கனேடிய சரித்திரத்தில்
புள்ளியிடும் அளவிற்கு ஒட்டாவா நாடாளுமன்றத் தாக்குதல், அதற்குப்பின்னர் பல
சம்பவங்கள்... கடந்த வாரம் யோர்க் கல்கலைக்கழக வளாக வளவினில் சுரங்கம்
கண்டுபிடிக்கப்பட்டது எங்கும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அரபு நாடுகளில் அமெரிக்க கனேடிய இராணுவம் பழைய
குகைகளையும் சுரங்கங்களையும் தேடும் இந்த வேளையில்
எமது கண்ணின் முன்னால் இவை நடக்கின்றன.

எது நடந்ததோ?.....
தெரிந்ததும் தெரியாததும்....
எங்களுக்கு பல விடயங்கள் தெரிந்தது போலிருக்கும். ஆனால் தெரியாது.
கடந்த மாதம் கடுமையான குளிர் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
பலர் அதனை கருத்தில் கொள்வதில்லை.

'இப்படி மழையடித்தால் எப்படி குடை பிடிப்பேன்...' பாடலை கேட்கிறோம். வானொலி,
தொலைக்காட்சிகளில் நிமிடத்திற்கு நிமிடம் குளிர் எச்சரிக்கையை கவனிப்பதில்லை.
பராமரிப்பு கவனக்குறைவால் 4 வயதுப் பையன் பாதுகாப்பற்ற கதவைத் தாண்டி கடும்
குளிரில் துடிதுடித்து இறந்திருக்கின்றான். வேறொரு
சம்பவத்தில் இளைஞன் ஒருவன் இறந்திருக்கிறான்.



நாட்டு காலநிலை தெரிந்தும் சில சம்பவங்களுக்கு நாங்களே
பொறுப்பாளிகள் ஆகின்றோம்.

இத்தனை அமளி துமளிக்குள்ளும் பிறிம்லி மீனா
ரெலிபோனில், ராசம்மாக்கா, ஆட்டிலறி அன்னம்மா,
செக்கண்ட்புளோர் செல்லம்மா, அகிலாண்டேஸ்வரி
எல்லோரையும் தங்கள் மன்றம் நடத்தும் சர்வதேச மகளிர்
தினத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்து விட்டு என்ரை
பேர்த்டேயும் வாறகிழமைதான் என்று சொல்லிவிட்டு வைத்தா.



வெகுவிரைவில் மார்ச் பிரேக்.
அண்ணை றைற் என பஸ்களில் கொண்டக்டர் சொல்லும்பொழுது
எமது மனக்கண்முன் வருவது பாலச்சந்திரன் என்ற கே.எஸ் பாலச்சந்திரன்தான்.

ரி.வி.ஐ. தொலைக்காட்சியில் Y.T. LINGAM SHOW வை.ரி.
லிங்கம் சோ 125 காட்சிகளுக்கு மேல் நடத்தியவர்.
யாழ்ப்பாணத்தில் மேடை வானொலி தொலைக்காட்சி
மட்டுமல்லாமல் இலங்கையில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களிலும்
முத்திரை பதித்த நடிகர் எழுத்தாளர் தயாரிப்பாளர் நிகழ்ச்சி
தயாரிப்பாளர்.



அவரின் சிறப்பு என்றும் சிரிப்பு. பட்டி தொட்டியெல்லாம்
கிராமத்துமக்கள் நடுச்சாமத்திலும் அதிகாலையிலும் இவரின்
நிகழ்ச்சிக்காக காத்திப்பது மட்டுமல்லாமல் வயிறு குலுங்கச்சிரித்து
கண்ணால் கண்ணீர்கூட வரும் என்றும் சிரித்து கண்ணீர் விட்டோம்.
அவர் மறைந்து ஓராண்டு காலம் ஓடிவிட்டது. மக்கள் மனதில்
அவரது நினைவுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவர் எம்மிடமிருந்து என்றும் பிரிய
மாட்டார்.



கலைஞர்களை வாழும் போதே வாழ்த்துங்கள்.

மார்ச் 1..15…..

1. எம்.கே. தியாகராஜ பாகவதர் நினைவு தினம் 1981 (மன்மத லீலையை வென்றார் உண்டோ..சொப்பன வாழ்வில் மகிழ்ந்தேன்.)



2. கண்டி ஒப்பந்தம் என்ற ஒப்பந்தத்தின் பேரில் கண்டி ராச்சியம் பிரித்தானியருக்கு கொடுக்கப்பட்டது. சிறை பிடிக்கப்பட்ட கண்ணுசாமியென்ற ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கன் தென்னிந்தியாவில் உள்ள வேலூர் கோட்டை சிறைக்கு அனுப்பப்பட்டான்.

2. நா. சிவலிங்கம் நினைவுதினம். (2010) றிச்மண்ட் ஹில் இந்து ஆலய வளர்ச்சியில் ஆரம்ப காலத்திலிருந்து இறுதிவரை பங்குகொண்டவர்.

2. குன்னக்குடி வைத்திய நாதன் வயலின் இசைக்கலைஞர் பிறந்த தினம் (1935-2008)



3. அலெக்சாண்டர் கிரகாம் பெல் பிறந்ததினம். தொலைபேசியைக் கண்டுபிடித்தவர். (1847-1922) (அவரது தாயாரும் மனைவியும் செவிப்புலனற்றவர்கள். அதுவும் இவரின் ஆய்வுக்கு காரணம் எனக் கூறுகிறார்கள். பிறந்தது பிரிட்டன், வாழ்ந்தது கனடா.

3. சிரித்திரன் ஆசிரியர் யாழ். கரவெட்டி சிவஞான சுந்தரம் நினைவுதினம். (1996) சவாரித்தம்பர் (சுந்தர்). வீரகேசரியில் மித்திரன் பத்திரிகைகளில் இவரது கேலிச்சித்திரங்கள் பிரபலமானவை.



4. மாசி மகம்

7. ஆசு கவி ஈழத்து எழுத்தாளர் கல்லடி வேலுப்பிள்ளை நினைவு தினம். (1860-1944)

8. சுண்ணாகம் அ. குமாரசாமிப்புலவர் நினைவு தினம். (1854-1922)

8. அனைத்துலக மகளிர் தினம். (1945 இல் கனடாவில் முதலில் கொண்டாடப்பட்டது)



10. 1876 இல் அலெக்சான்டர் கிரகாம் பெல் உலகின் முதலாவது தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.

11. 1902 இல் காங்கேசன்துறையிலிருந்து சாவகச்சேரி வரை 21 மைல் நீள புகையிரதப்பாதை போடப்பட்டது. 1905 இல் மதவாச்சி வரை நீடிக்கப்பட்டது.

11. நடிகர் ஓமக்குச்சி நரசிம்மன் நினைவுதினம்.




# அனைத்துலக மகளிர் தினம்



அனைத்துலக மகளிர் தினத்தை அறிவுபூர்வமாக
அகிலம் முழுவதும் கொண்டாடும் அரிவையரே
வாழ்வும் வளமும் மங்காத புகழும்சேர
அடியேன் அகங்குளிர்ந்து முகம்மலர்ந்து வாழ்த்துகின்றேன்.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை,
அரிவை, தெரிவை, பேரிளம்பெண்ணென எத்தனை பருவம்
எத்தனை பருவம்வரை வாழ்ந்தாய் என்பது முக்கியமல்ல
ஒவ்வொரு பருவத்திலும் என்னசெய்தாய் என்பதே முக்கியம்.

மலரென்று சொல்லிச்சொல்லியே உன்னை மழுங்கடித்தார் --- நீ
மறக்குடியில் பிறந்த மறத்தியென்று காட்டு --- உன்
முன்கதைச் சுருக்கம் எப்படியிருந்தாலும் பரவாயில்லை
இந்த வினாடியிலிருந்து புரட்சிப்பெண்ணாக வாழத்தொடங்கு.

பெண்ணுக்கு அறிவை வைத்தான் இறைவன்
மண்ணில் சிலமூடர் மாதரறிவை கெடுத்தார்
விண்ணை முட்ட அறிவை வளர்த்து
வீரம் கொண்ட பெண்ணாய் வாழ்ந்துகாட்டு

பட்டங்கள் பெற்று சட்டங்கள் ஆக்கியும்
பாட்டும் பரதமும் பழுதறக் கற்றும்
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்
பாரினில் நீரும் புதுமைகள் படைப்பீர்.

கப்பல், துறைமுகத்தில் நிறுத்திவைப்பதற்காக கட்டப்படுவதில்லை
அலைகளின் சீற்றத்தையும் புயலின் புரட்டலையும்
எதிர்கொண்டால்தான் கப்பலாக இருப்பதன்மதிப்பு கப்பலுக்கு
கப்பலாய் இருக்கவேண்டுமானால் கடப்பைவிட்டு வெளியேவா.

காலனிடமிருந்து கணவனை மீட்ட சாவித்திரி
கணவனுக்காக நீதிகேட்டு மதுரையை எரித்த கண்ணகி
முதுகில் பிள்ளையைச்சுமந்து வீரப்போரிட்ட வேலுநாச்சியார்
வீர வரலாற்றை விபரமாக படித்துப்பார்.

வரலாற்றை படிக்க முடியாதவர்களால் வரலாற்றை படைக்க முடியாது
வானத்து நட்சத்திரமாய் இல்லாவிட்டாலும் பரவாயில்லை
இருட்டில் ஒளிதரும் மெழுகுவர்த்தியாய் இரு
வரலாற்றில் உனது பெயரும் பதியப்படும்.

அயல் வீட்டு விடுப்பை கேட்பதில் இருக்கும் ஆர்வம்
அயலவர் துயர்துடைப்பதிலும் இருந்தால் சிறப்பு
சாதிக்காக துடிக்காமல் சாதிக்க துடியுங்கள்
சரித்திரம் நிட்சயமாய் உங்களையும் பதிவு செய்யும்.

உன்னால் கண்ணீர் விடுபவர்களை உருவாக்காதே
உனக்காக கண்ணீர் விடுபவர்களை உருவாக்கு
உங்கள் கவலைகளை விளம்பரப்படுத்தி பயனில்லை
ஏனெனில் அவற்றை யாரும் வாங்கமாட்டார்கள்.

விடுதலைக்கு மகளிர் எல்லோரும் வேட்கை கொண்டு
விடியும் நல்லொளி காண இன்றே
சிறுமைதீர நம் தாய்த்திரு நாட்டை
திரும்ப வெல்வதில் சேர்ந்திங்கு உழைப்பீர்.



- மார்க்கம் சந்திரன் -

"Let me help you make the right choice"

Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393



BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2



"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All Stars Realty Inc., Brokerage
Chairman's Club Award
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit கவலை வேண்டாம்



அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com



THE TRUSTED MORTGAGE AGENT
"Solution For Every Mortgage"
Mortgage Alliance
The Guardian
*Some Terms & Conditions May Apply
•I will arrange your 1st Mortgage with 0% down.
•Need a 2nd Mortgage???
"When banks say no We say yes"
@ interest rate starting from 6.99%+.
Surren Selvanayagam
(LIC: M14001034)
சுரேன் செல்வநாயகம்
Contact: 647.308.3090 / E-Mail: surren12@gmail.com



INCOME TAX
• Personal • Corporate Returns
• Small Business • GST/HST Filing
Karuna Suren B.B.A (Hons), CGA, CPA
Cell: 647-200-9307 • Bus: 416-609-3938
Email: karuna.suren@gmail.com





Free Real Estate Class - Call: 416.321.6969

RealEstate / Commercial Investments



MIDLAND & ELLESMERE
Bedroom : 3
Washroom: 3
Price : $649,900
2 Years old



AJAX
Bedroom : 3
Washroom: 2
Price : $389,900
5 Years old



STAINES & SEASONS DR
Bedroom : 4 + 1
Washroom: 4
Price : $749,900



BRAMPTON
Bedroom : 4
Washroom: 4
Price : $ 599,900



MARKHAM & NASHDNE
KNIT WEAR
BUSINESS + FOUR UNITS
Asking price: 750,000



MCCOWAN & HWY 401
1Bedroom : 2
Washroom: 2
Price : $ 259,900

நேர்மையுடனும் விசுவாசத்துடனும் உங்களுக்காக வீடுகள் வியாபார
நிலையங்கள் வாங்கவும் விற்கவும் உங்கள் கனவுகளை நனவாக்கும்
ஒரு நம்பிக்கையான முகவர்
PYRAMID GROUP REAL ESTATE PROFESSIONALS
Neranjan & Sugan Team
PYRAMID GROUP YOUR DREAM TEAM
TOP LISTING TEAM IN GTA !!!
Neranjan Rasiah
Sales Representative
416-804-4436
LIST WITH US & SEE THE DIFFERENCE
$$$ Cash Paid for Referrals $$$





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



RE/MAX Dynasty Realty Inc.
A. Anton Jeeva B.Eng
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage can be arranged from 2.4%
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9



Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED